விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
R A M C O

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 01 புதன்கிழமை (15.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 147

### வடக்குத் தேர்தலுக்கு முன்

# மாகாண அதிகாரங்களை நீக்கக் கோரிக்கை!



வட மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு முன்னர் தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாண சபைக்குரிய ஆறு அதிகாரங்களை நீக்கிவிடுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்து ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளதாக அந்த இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ்கள் வேலைநிறுத்தம்!

(கொழும்பு)

அகில இலங்கை தனியார் பஸ் கூட்டமைப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுடன் வேலைநிறுத்த போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

எரிபொருள் விலைகேற்ப தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்கு போக்குவரத்து அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இதனையடுத்தே வேலை நிறுத்த போராட்டத்தில் தாம் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அந்த கூட்டமைப்பின் செயலாளர் அஞ்சன பிரியந்த தெரிவித்தார்.

இந்த வேலைநிறுத்த போராட்டத்துடன் தங்களுக்கு எவ்விதமான தொடர்பும் இல்லை என்று தெரிவித்துள்ள அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன,

பொரளை கெம்பல் மைதானத்தில் நாளை வியாழக்கிழமை நடைபெறும் ஊர்வலத்தையடுத்தே பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் கலந்துரையாடுவோம் என்றும் அவர் கூறினார். (செ-11)

## பொதுநலவாய மாநாட்டில் 54 நாடுகள் பங்கேற்கும்

### அரசு நம்பிக்கை

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் 54 நாடுகளும் கலந்துக் கொள்ளும் என்று இலங்கை அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.


எதிர்வரும் இரண்டு வார காலப் பகுதியில் இந்த மாநாட்டுக்கான அழைப்பிதழ்களை அனைத்து நாடுகளுக்கும் அனுப்பி வைக்கவிருப்பதாக, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் அனைத்து நாடுகளும் கலந்துக் கொள்ளும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த மாநாட்டை புறக்கணிக்க விருப்பதாக கனடா அறிவித்து வரும் நிலைய்யில், இது தொடர்பில் கருத்து வெளியிட்ட (19ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் எவரும் காணாமல் போகவில்லை

### முடிந்தால் நிரூபியுங்கள் - பொனிபஸ் பெரேரா



யுத்தத்திற்குப் பின் வன்னி மாவட்டத்தில் எவரும் காணாமல் போகவில்லையென்றும் அப்படி யாராவது காணாமல் போயிருந்தால் அது யாரென்றும் எப்போது எங்கு காணாமல் போனார் என்று தெரியப்படுத்தினால் நல்லது.

அவ்வாறு தெரியப்படுத்தினால், தான் அது சம்பந்தமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவாதத்திற்கு தயாரென்றும் வன்னி பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியும் வடக்கின் காணாமல் போனோர் தொடர்பாக ஆராயும் அதிகாரியுமான மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அமெ. தூதரகம் கொழும்பில்!

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிக்க உள்ளது. இதற்காக தற்போது காலி வீதியிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு அடுத்ததாக உள்ள கட்டிடத்தை கொள்வனவு செய்துள்ளது.

இந்த கட்டிடத்தில் முன்னர் இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகாரலயம் செயற்பட்டுள்ளது.

இந்த கட்டிடத்தின் உரிமை மாற்ற நிகழ்வு அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே. சிசன் மற்றும் இலங்கைக்கான (20ஆம் பக்கம் பார்க்க)

## ரூ.100 கோடி செலவில் 'தமிழ்த் தாய் சிலை'

### மதுரையில் நிறுவப்படும் என அறிவிப்பு

சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் 100 கோடி இந்திய ரூபாய் செலவில் தமிழ்த தாய் சிலை ஒன்று நிறுவப்படும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

அமெரிக்காவிலுள்ள சுதந்திரதேவி சிலையைப் போல, தமிழர்களின் கலை இலக்கியச் செல்வங்களையும் கட்டிடக்கலை நாகரிகப் பெருமைகளையும் உலகுக்கு பறைசாற்றும்படி தமிழ்த்தாய் சிலை அமையும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களின் மாதிரிகளை உருவாக்கி, தமிழர்களின் தொன்மைச் சான்றுகளாய் விளங்கும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மரம், செடி கொடிகளுடன் தமிழ்த் தாய்ப் பூங்கா ஒன்றும் அங்கு உருவாக்கப்படும் என்றும் நேற்று செவ்வாய்க் கிழமை அவர் (19ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பப்பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்.அச்செழு பகுதியைச் சேர்ந்த ஞானலதா திருவருட்செல்வன் (வயது-41) என்ற குடும்பப்பெண்ணே இவ்வாறு நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## பாக். யுத்தக் கப்பல் திருமலையில்



பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான யுத்தக் கப்பலொன்று திருகோணமலைத் துறைமுகத்தை நேற்று வந்தடைந்துள்ளது. இக்கப்பல் (19ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய மாநாட்டுக்கு முன் மனித உரிமைகள் வேலைத்திட்டம்!

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம நடக்கவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டுக்கு முன்னதாக, இங்கு மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான செயல்நுட்ப உதவிகளை (Technical support) வழங்க பொதுநலவாய செயலகம் முன வந்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் பற்றி தேசிய மட்டத்திலான விசாரணை நடத்துவது பற்றி பொதுநலவாய செயகத்தின் ஊடாக பல நாடுகளின் பிரதிநிதிகள் கொழும்பு வரவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் டாக்டர் பிரதீபா மஹாநாம தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய செயலாளர் கமலேஷ் ஷர்மா குழுவினருடன் அண்மையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர், அடுத்த 6 மாத காலத்துக்குள் இந்த செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்பொருட்டு, வட-அயர்லாந்து, கென்யா, உகாண்டா, சியராலியோன் உள்ளிட்ட பல நாடுகளின் மனித உரிமை நிபுணர்கள் இலங்கை வந்து நல்லிணக்கம் மற்றும் மனித (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இயற்கை அனர்த்தத்திற்கு நாட்டில் 7 பேர் பலி!

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் கடும் மழையால் இதுவரையில் 7 பேர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

மலையகத்தின் நுவரெலியா மாவட்ட பெயார்வெல் மற்றும் டிக்ஓயா பகுதிகளில் நான்கு பேர் பலியாகினர். அத்துடன் நாக சேனை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி மாவட்டங்களில் 3 பேர் பலியானதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் இது வரையில் 319 குடும்பங்களைச் சேர்ந்த 1139 பேர் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

## கிழக்கில் தொடர்கிறது சீரற்ற காலநிலை

**கிழக்கில் தொடரும் சீரற்ற காலநிலை -நெருக்கடிக்குள் மீனவர்கள் .**

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீசும் கடும் காற்றுடன் கூடிய மழையினால் மாவட்டத்தின் இயல்பு நிலை பாதிப்படைந்திருந்தது.

ஏற்பட்ட காலநிலைமை மாற்றத்தினால் வாகரை ,கல்குடா ,களுவன் கேணி,புன்னக்குடா, சவுக்கடி,ஏறாவூர்,களுவாஞ்சிக்குடி போன்ற கரையோரப் பிரதேசங்களில் கடல் கொந்தளித்து காணப்படுகிறது.மரங்கள் முறிந்ததும் குடிசை வீடுகள் சேதமடைந்தும் காணப்படுகிறது. கரையோரத்தில் வைக்கப்பட்டுள்ள கரைவலைகள் கடலினுள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மீன்பிடி படகு, இயந்திரம் ,கரைவலை போன்றவற்றை பாதுகாக்கும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுப்ட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள சேத விபரங்களை உடனடியாக தெரிவிக்க முடியாமல் உள்ளதாகவும் சரியான சேத விபரங்களை பெறும் பொருட்டு பிரதேச கள உத்தியோகத்தர்களை பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சென்று தகவல்களை திரட்டும் படி கேட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரி எஸ்.ரி.ஜோர்ஜ் தெரிவித்தார்.

இதேவேளை வாழைச்சேனை ஓட்டமாவடி பிரதேசத்திலிருந்து கடலுக்கு சென்ற 400 ஆழ்கடல் படகுகளில் 25 படகுகள் மாத்திரம் இதுவரைக்கும் சொந்த இடம் வந்து சேரவில்லையென்றும்.இது பற்றிய தகவலை பெறுவதற்கான நடவடிக்கையில் தாம் கடற்றொழில் அமைச்சின் உதவியை கேட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (செ-11)


வேலைவாய்ப்பு

கனடாவிற்கு work permit ல் சென்று வேலை செய்வதற்கான சந்தர்ப்பம்.

அடிப்படை ஆங்கில அறிவு அவசியம்.
இறுதி திகதி 23.5.2013

ACS
Tel: 077-0071835 / 077-3967334

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சந்தியில் இருந்து 100m







# திருட்டு முயற்சி முறியடிப்பு

மாடி வீட்டுக் கதவுப் பூட்டைக் கழற்றி வீட்டுக்குள் நுழைந்து திருட முயன்றவர்கள் வீட்டு உரிமையாளர் விழித்துக் கொண்டதால் திருட்டு முயற்சியைக் கைவிட்டு தப்பி ஓடினர். இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு திருநெல்வேலி தபால்பெட்டி சந்தியை அண்மித்த தாழையடி ஒழுங்கையில் உள்ள யாழ் போதனா வைத்தியசாலையின் தாதிய மேற்பார்வையாளர் ஒருவரின் வீட்டில் இடம் பெற்றது.

குறித்த வீட்டில் அன்றைய தினம் பகல் வேளை ருதுசாந்தி நிகழ்வு இடம் பெற்று இருந்தது.இதனை அவதானித்து வைத்திருந்த திருடர்கள் வீட்டில் உள்ள வளர்ப்பு நாய்க்கு மயக்கமூட்டும் உணவைப் போட்டு விட்டு திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். எனினும் வீட்டு உரிமையாளர் விழித்துக் கொண்டதால் இத் திருட்டுச் சம்பவம் தடுக்கப்பட்டது.

திருமணச் சடங்கு, ருதுசாந்தி நிகழ்வு, வீடு குடிபுகுதல் ஆகிய மங்களகரமான நிகழ்வுகள் இடம்பெறுகின்ற வீடுகள் மீது திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்



T.P.: 0719315664 , 0777569205

14.05.2013 முதல் 19.05.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

மீண்டும் யாழில்

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(c-3337)



# கண்காட்சியும் மலிவு விற்பனையும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மாதர் சங்கங்கள் நாளை வியாழக்கிழமை உள்ளூர் உற்பத்திகளின் மாபெரும் கண்காட்சியும், மலிவு விற்பனையும் நடத்துகின்றனர். இம் மாதர் சங்கங்கள் Swiss Labour Assistance (SAH) இன் வழிகாட்டலுடனும் இயங்கி வருவருகின்றன. ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் கிராம சேவையாளர் (MUL/73) அலுவலகத்தில் இவ்விற்பனைக் கண்காட்சி காலை 09.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அவர்களினால் இவ் வைபவம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இதில் SAH நிறுவனத்தின் பலவிதமான பயிற்சிகளின் வெளிப்பாடுகளை காணலாம் என்பதையும் பலவிதமான உள்ளூர் உற்பத்தி பொருட்களை மலிவு விலையில் பெறலாம். என்றும் கற்குவாரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி யானகி விநாயக மூர்த்தி தெரிவித்தார்.

இந்நிகழ்வின் ஒதியமலை ,காதலியார்,சம்மளங்குளம், கணேசபுரம், மாங்குளம் வடக்கு, கற்குவாரி, பனிக்கங்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இணைந்து நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## மரண அறிவித்தல்



### கனகசபை காலிங்கராஜா (சின்னமணி)

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை புகுந்த இடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை காலிங்கராஜா அவர்கள் 2013 வைகாசி 10ஆம் திகதி அன்று இணுவிலில் இயற்கை மரணமானார்.

அன்னார், காலஞ்சென்ற கனகசபை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா, நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், நேசமலர் அவர்களின் அன்புக் கணவரும், உதயகுமார், விஜயகுமாரி, சசிகுமாரி, நந்தகுமாரி, பாலகுமார், திலீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமலர், காலஞ்சென்ற சிவானந்தராஜா, சந்திரகுமார், ஆழகானந்தன், குமுதா, சுஜீபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிந்துஜா, சுஜானி, சிவானுஜா, சங்கீர்ணா, சாரங்கன், நிதுர்சா, யதுர்சா, விக்னேஷ், 'ஹரீஷ், ஹரிணி, வைஷினி, வர்ஷினி, அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கண்மணி, காலஞ்சென்ற பொன்னம்மா, பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.05.2013 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று இணுவில் காரைக்கால் இந்து மாயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி.
இணுவில் தெற்கு. இணுவில்
தொடர்பு :- க.திலீபன்(மகன்) 0778462355 (3331)

தகவல் : குடும்பத்தினர்




## நீங்கள் விரும்பிய இடங்களில்....

காணி-வீடுகளை வாங்கித் தருவதற்கும், விற்றுக் கொடுப்பதற்குமான நம்பிக்கையான ஒரே நிறுவனம்

Real Estate

ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise

26D, பிறவுண் வீதி. கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
தொ.பே: 0779994603, 0215684810
E-mail:nrluxmy@gmail.com



**Direct Marketing International Pvt (Ltd)**

DS-MAX

## வேலைவாய்ப்பு

**(Management Trainees -2013)**
**25 People Needed Imediatly**

சர்வதேச ரீதியில் இயங்கும் நிறுவனத்திற்கும் அதன் வட மாகாண கிளைகளுக்கு (யாழ்ப்பாணம்,வவுனியா,கிளிநொச்சி ,முல்லைத்தீவு, மன்னார்) ஆகிய பிரதேசங் களிலிருந்து O/L , A/L படித்தவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

- Trainee Marketing Executive,
- Sales Representatives.
- Innvontary Customer Service.

பயிற்சியின்போது fixed income Package ஆக 12,000-15,000 பெறலாம்.

குறிப்பு: தங்குமிட வசதிகள் உண்டு; வயதெல்லை: 18-35

தொடர்புகளுக்கு: 0771363797, 0217200867, 0755049038

(C-3295)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கலையும் வடிவமைப்பும்**
**3-ம் வருட மாணவர்களின்**
## காண்பியக் கலைக்காட்சி.

**கலைக்கூடம் - கலைப்பீட புதிய கட்டிடத் தொகுதி, யாழ்.பல்கலைக்கழகம் 16, 17, 18 / 05/2013, காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை**

பிரவேசம் இலவசம்

அனுசரணை:
கிருபா லேணர்ஸ் இல.226. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-021 222 4353, 021 492 3200

(2638)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சாமர்த்தியம்

யாரையும் ஏமாற்றவும் கூடாது; ஏமாந்து போகவும் கூடாது; இதற்கு மிகவும் சாமர்த்தியம் அவசியம்.

ஒரு ஊரிலே பெரிய வீணை வித்துவான் இருந்தார். உண்மையிலே வீணை வாசிப்பதிலே மிகவும் கெட்டிக்காரன்.

அவரது வீணை வாசிப்பை கேட்டு விட்டு ஒரு மகாராஜா என்ன செய்தார் தெரியுமா? ஆள் உயரத்துக்கு ஒரு வீணையை தயார் செய்து அதை அவருக்கு பரிசாகக் கொடுத்தார்.

அதன்பின் அவர் எந்த ஊருக்குச் சென்றாலும் அந்த வீணையைத் தன்னுடன் எடுத்துச் சென்று கச்சேரிகளில் வாசிப்பார். அவர் வீணை வாசிப்பதில் நம்பர் வன் என்று கூறலாம்.

அதேபோல் கடம் வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர் ஒருவர் இருந்தார். அவர் காலத்திலே கடம் வாசிப்பதில் நம்பர் வன் என்று கூறினார்கள்.

இருவரும் ஒரே நேரத்தில் கச்சேரி நடத்துவதில்லை. இவர்கள் இருவரையும் எப்படியாவது ஒரே மேடையில் வாசிக்க வைக்க வேண்டுமென்று மக்கள் விரும்பினர்.

இரு துருவங்களை எப்படி ஒன்றிணைக்க முடியும்?

ஒரு கிராமத்தில் கௌரவத்திற்கு ஆசைப்பட்ட பண்ணையார் இருந்தார். அவர் வீட்டிலே ஒரு கல்யாணம். அக் கல்யாணம் அவரது மகளுக்காகும்.

இந்தக் கல்யாண கச்சேரிக்கு எப்படியாவது அந்த இரு வித்துவான்களையும் கொண்டு வந்து கச்சேரியில் அமர்த்த வேண்டும் என நினைத்தார்.

ஆனால், இவர் வருகிறார் என்றால் அவர் வரமாட்டார். அவர் வருகிறார் என்றால் இவர் வரமாட்டார். என்ன செய்வதென யோசித்தார்.

''சரி இருவரும் வரும் விடயத்தை ஒருவருக்கொருவர் கூறாது, பொய் சொல்லி அழைத்துக் கொள்வோம்.

கச்சேரி ஆரம்பமாகும் சமயத்தில் இருவரையும் மேடையில் அமர வைத்து விடுவோம். எல்லோர் முன்னிலையிலும் அவர்கள் சண்டை பிடிக்கமாட்டார்கள் என்றொரு முடிவுக்கு வந்தார். கூறியபடி ஏற்பாடுகளும் முடிவு பெற்றன.

இருவரும் தனித்தனியாக அழைத்து வரப்பட்டு வெவ்வேறு வீடுகளிலே தங்க வைக்கப்பட்டனர்.

அன்று மாலை இசைக்கச்சேரி நடைபெற இருந்தது.

ஆனால், இருவரும் அழைத்து வரப்பட்ட சிறிது நேரத்தில் இவரது திருகுதாளம் சாதுவாகத் தெரிய வரத்தொடங்கியது.

ஊரிலே இதற்கென சிலபேர் இருப்பார்கள்... ஒருவருக்கொருவர் பற்ற வைப்பதற்காக...

வீணை வித்துவான் கட வித்துவானை எப்படி ''கட்'' செய்யலாமென யோசித்துப் பார்த்தார்.

உடனே பண்ணையாரை அழைத்து... ''இதோ பார்! அந்த 'கட' வித்துவானோடு நான் வாசிப்பதற்கு எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. இருந்தாலும் ஒரு விடயத்தை உங்களுக்கு சொல்ல வேண்டியது எனது கடமை.

அவர் எத்தனை ''கடம்'' கொண்டு வந்துள்ளார் என்பதை கவனித்தீர்களா?'' என்று கேட்டார்.

''கவனித்தேன்! இரண்டு கொண்டு வந்திருக்கிறார்'' என்றார்.

''அது எதற்கென்றால், ஒரு கடம் உடைந்தால், மற்றதை உபயோகப்படுத்துவதற்கு... ஒரு சுபகாரியத்திலே மேடையிலே பானை உடைந்தால் அது நல்ல சகுணமா? யோசித்து பாருங்கள்'' என்றார்.

நீங்கள் கூறுவது நியாயம்தான். ஆதலால், தருவதாக பேசிய பணத்தைக் கொடுத்துத் திருப்பினார்.

உடனே கடவித்துவான் இந்தப் பண்ணையாரைப் பார்த்து ''நீங்கள் சொல்வது சரி... இருந்தாலும் நானும் ஒரு விடயத்தை உங்களிடம் சொல்ல வேண்டியது எனது கடமை'' என்றார்.

என்னவென அவர் வினவினார்.

''அந்த வீணை வித்துவானின் வீணை ஆள் உயரம் வரை உள்ளது. அதை அவர் மட்டும் தூக்க முடியாது. அந்த வீணை மேலே பட்டுத்துணி போர்த்தி முன்பக்கம் இருவரும் பின்பக்கம் இருவருமாக மொத்தம் நான்கு பேர் தூக்கிக் கொண்டு மேடைக்கு வருவார்கள். அது பார்ப்பதற்கு பாடையைத் தூக்கும் ஞாபகம் வரும்.

''சுபமுகூர்த்தம் நடக்கும் வேளையிலே இது தேவைதானா– நன்றாக யோசித்துப் பாருங்கள்'' என்று கடவித்துவான் கூறினான்.

இதைக்கேட்ட பண்ணையார் சற்று யோசித்தார்.

''என் வீட்டுக் கல்யாணத்துக்கு கச்சேரியே வேண்டாம்'' என்று கூறிவிட்டு அவரையும் கணக்கு தீர்த்து அனுப்பி விட்டார்.

இந்த மூன்று பேரில் யார் கெட்டிக்காரன் என்று நினைக்கிறீர்கள்? ஒன்றுக்கொன்று சளைத்தவரில்லையே...

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தொழில் வாய்ப்பை இலக்காகக் கொண்டே தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்

## மு.சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இளைஞர், யுவதிகளுக்கு தொழில் சார் பயிற்சிகள் வழங்கப்படும் போது அவர்களுக்கான தொழில் வாய்ப்பை இலக்காகக் கொண்டே அப்பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலுக்கு தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப் பிரதேசத்தில் வாழ்கின்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழில்சார் பயிற்சிகள் வழங்கப்படும்போது அவர்களுக்கான தொழில்வாய்ப்பை இலக்காகக் கொண்டே அவை வழங்கப்பட வேண்டும்.

மாறாக பிரதேசத்திற்கு பொருத்தமற்ற தொழிற் பயிற்சிகளை வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் தொழிலைபெறுவதற்கானவாய்ப்பை இழக்க நேரிடும்.

இதேவேளை, கிராமங்கள் தோறும் பல்வேறுபட்ட தொழில் பயிற்சிகளை பல்வேறு நிறுவனங்களும் வழங்கி வருகின்றன. ஆனால், குறித்த சில நிறுவனங்களில் வழங்கப்படும் சான்றிதழ்கள் பெறுமதியற்றவையாக அமைகின்றன. எனவே, இளைஞர்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு பெறுமதியான சான்றிதழ்களை வழங்குவதற்கு பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இதேவேளை, மிக முக்கியமான பயிற்சிகளை வழங்குகின்ற சந்தர்ப்பங்களில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள வியாபார மத்திய நிலையமானது மக்கள் மத்தியில் குறித்த பயிற்சிநெறி சார்ந்த விழிப்புணர்வை சமூகத்திற்கு வழங்குகின்ற சந்தர்ப்பங்களில் அதிகளவான பயனாளிகளை உள்வாங்கிக் கொள்ள முடியும்.

இதேவேளை, தொழில் வாய்ப்பைப் பெற முயற்சிக்கும் இளைஞர் யுவதிகளும் தமது தொழில் சார் தகைமைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட அமைப்புகள் மிகச் சீராக செயற்பட்டு தமது கிராமங்களில் முன்னேற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனால் சில கிராமங்கள் இன்னமும் மேம்பாடையாத நிலையிலேயே காணப்படுகின்றன. ஏனெனில் அங்கு நீண்ட காலமாக ஒரே விதமான கிராம மட்ட அமைப்புக்களே இயங்கி வருகின்றன.

அவை இன்றைய சூழலுக்கேற்ற செயற்திறன்வீச்சை கொண்டிருப்பதில்லை. இவ்வாறான பகுதிகளில் கிராமமட்ட அமைப்புக்களை மீளமைப்பதில் மக்கள் ஆர்வம் காட்டுவதுமில்லை.

எனவே, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புதிய மக்கள் அமைப்புக்களின் தெரிவுகள் குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு வழங்க வேண்டும்.

அத்தோடு கிராமமட்ட அமைப்புக்களின் செயற்பாடுகள் தொடர்பில் சீரான மீளாய்வுப் பொறிமுறையும் கையாளப்பட வேண்டும் என்றார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-140 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 | 80 |
| தக்காளி | 100 | 80 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 60 |
| கோவா | 90 | 60 | 80 | 80 |
| கரட் | 80 | 90 | 120 | 120 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 180 | 140-190 | 120-160 | 160 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 60 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | -- | -- |
| பயற்றங்காய் | 60 | 100 | 80 | 60 |
| லீக்ஸ் | 140 | 140 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 65 | 80 | 120 |
| கறிமிளகாய் | 80 | 90 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 170-250 | 600 | 400 |
| போஞ்சி | 120 | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 45-50 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 100 |

# இராசி பலன்

**15.05.2013**

**(வைகாசி 01, புதன்கிழமை)**

**சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு**
**பஞ்சமி பிற்பகல் 3.28 மணி வரை**
**புனர்பூசம் முன்னிரவு 8.37 மணிவரை**
**இராகுகாலம் 11.53--1.23 மணிவரை**
**சுபநேரம் 4.23-5.23 மணிவரை**

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தாய் வழியில் அனுகூலமுண்டு, கல்விக்காக எடுத்த முயற்சிகள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், பயணங்களால் பலனுண்டு

**இடபம்** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, எடுத்தகாரியங்களில் அதிக பிரயாசை காட்டவேண்டிய நாள்.

**மிதுனம்** வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், உறவினர் சந்திப்புண்டு.

**கடகம்** பயணத்தால் பலனுண்டு, வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**சிங்கம்** கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும், திடீர் பயணம் ஒன்று உருவாகும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**கன்னி** யோகமான நாள், இளைய சகோதரத்தின் வழியில் இனிய தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறும், போசன சுகமுண்டு.

**துலாம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வருவர், ஆரோக்கியமான நாள், தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படும் நாள், இன சன வருகையுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**தனுசு** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பணக் குறைவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படலாம், முயற்சிகளில் தாமதம் உண்டு.

**மகரம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வாய்த்த நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, போசன நன்மையுண்டு.

**கும்பம்** ஆரோக்கியமான நாள்., செய் தொழில் மேன்மையுண்டு, கடன் பிரச்சினையை தீர்க்க சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், மறைமுகப்போட்டிகள் மாறும்.

**மீனம்** ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபடவேண்டியநாள், தொலைபேசி மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு நான் எதிரானவன் அல்லன்-யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டதொரு நிறுவனம். இங்கு வழங்கப்படும் பட்டம் பெறுமதி மிக்கது. இதனை மறுப்பதற்கில்லை. இங்கு பட்டம் பெறும் பட்டதாரிகளுக்கு எதிர்காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் தொடர்ந்து அரச பதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் தெரிவு செய்யப்பட்ட 88 மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் சான்றிதழும் காசோலையும் வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு நான் எதிரானவன் அல்லன். அரசாங்கத்தின் பணிப்புரைக்கு அமைவாகவே நான் செயற்படுகிறேன். இதனால் இந்த நிறுவனத்தில் பட்டம் பெற்றவர்களைப் பட்டதாரிப் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ள முடியாமற் போயுள்ளது.

இந்த உயர் தொழில்நுட்பவியல் நிறுவனமானது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம். அத்தோடு உயர்கல்வி அமைச்சின் கீழ் இந் நிறுவனம் இயங்கி வருவதால் இங்கு வழங்கப்படும் பட்டம் பெறுமதி வாய்ந்தது.

எதிர்காலத்தில் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் பட்டம் பெறும் பட்டதாரிகளுக்கு அரச பதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடைமுறை தொடர்ந்து இடம்பெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்வதோடு, அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிகளையும் உரிய முறையில் பயன்படுத்தி ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி பயணிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)



நன்றி: மிரர்

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சட்ட விரோத மதுபான உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது,

குறிப்பாக வெற்றிலைக்கேணி, நித்திய வெட்டை, கேவில் ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பானங்கள் உரிய முறையில் கள் விற்பனை நிலையங்களில் வைத்து விற்பனை செய்யப்படாது பனை மரங்களின் கீழும் மற்றும் காட்டுப் பகுதிகளிலும் சில வீடுகளிலும் வைத்து விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனைவிட வீடுகளிலும் சில சில்லறைக் கடைகளிலும் சாராயம் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் சிறியவர்கள் கூட இலகுவாக மதுபானங்களை பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டு வருகின்றது.

இந்த மதுபானங்களை அருந்தும் மதுப்பிரியர்கள் அளவு கடந்த மதுபோதையில் பிரச்சினைகளை உருவாக்குகின்றனர்.

எனவே, உரியவர்கள் இதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-60)

# சமுர்த்தி ச.அபி.நிறுவனத்தில் உதவி வழங்கும் நிகழ்வு

(தும்பளை),

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் இப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 150 மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கல் மற்றும் திரிய தியச உதவித் திட்டத்தின் கீழ் நான்கு பேருக்கு நாற்பதாயிரம் ரூபா வீதம் பணம் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை 10 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொள்வார்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-19)

# திருட்டு மின்சாரம் பெற்ற நால்வருக்கு அபராதம்

(கரவெட்டி)

கரவெட்டி மத்தி கிழக்குப் பகுதிகளில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற நான்கு பேருக்கு பல இலட்சம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பில் இருந்து வருகை தந்த விசேட மின்சாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது, குறித்த நான்கு பேருக்கும் எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் குறித்த நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகள் மின்சார சபைக்கு நட்ட ஈடும் நீதிமன்றத்திற்கு அபராதமும் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

இதன்படி மின்சார சபைக்கு நட்டஈடாக 5 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாவையும் நீதிமன்றத்திற்கு அபராதமாக 2 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவையும்செலுத்தும்படி உத்தரவிடப்பட்டது. (அ-24-60)

# மரண அறிவித்தல்



## திருமதி பரமு பாலயோகம்

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் அழகாபுரி களபூமி காரைநகர் தெற்கை வசிப்பிடமாகவும், தற்பொழுது சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரமு பாலயோகம் 13.05.2013 திங்கட்கிழமை காலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - சிவகாமன் தம்பதிகளின் மூத்த மகளும், பரமுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னவி-பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகளும், தங்கரத்தினம் , இந்திராணி (கனடா), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், தவமணிதேவி (நியூசிலாந்து), தவராசா, செல்வராசா (கனடா) ஆகியோரின் மூத்த சகோதரியும், மங்களாதேவி, வசந்தகுமாரி (கனடா), விஜயகுமாரி (கனடா), மஞ்சுளா (கனடா), தர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவலிங்கம் (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்- முன்னாள், காரைநகர் மத்தி/தொல்புரம் மேற்கு, கிராமசேவையாளர்), சற்குணகுமார் (கனடா), குணசேகரம் (கனடா), புவனேந்திரன்(கனடா), உதயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவமாலதி- சதீஸ் (லண்டன்), சிவவேணி (சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க இயக்குநர்), மயூரன் , அனுசியா- கனரூபன் (கனடா), ஜனார்த்தனன் , ஜனகா, ஜவனிகா, டிலக்ஷன் , மிதுலா (கனடா) ஆகியோரின் அன்புப் பேத்தியும், தேயா (லண்டன்) அருமைப் பாசமிகு பூட்டியும் ஆவார்.

கந்தையா, காலஞ்சென்ற வீரசிங்கம், நாகமணி, இராஜேஸ்வரி, நிர்மலாதேவி நந்தலோஜினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.05.2013 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சி.பரமு (கணவர்),
எஸ்.கே.சிவலிங்கம் (மருமகன்,
ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)

சுழிபுரம் மேற்கு
15.05.2013

(2636)

## அவசர கலந்துரையாடல்

HNDE, HNDIT உடற்கல்வி, மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகள் அனைவருக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஸ்ரான்லி வீதி அலுவலகத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக அமைச்சரின் செயலாளர் பி.என்.சுதர்சன் அறிவித்துள்ளார். (அ)

## 66 ஆவது ஆண்டு நிறைவில் மரதன் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

விநாயகர் சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கிடையிலான 8 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்ட மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலைய முன்றிலில் ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன் அன்றைய தினம் இரவு 7.30 மணிக்கு கைதடி பிரதேச சனசமூக நிலையங்களுக்கு இடையிலான கயிறிழுத்தல் போட்டி விநாயகர் மைதானத்தில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## விடைத்தாள் திருத்தும் பணி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய பாடசாலைகளது மாகாண மட்ட தரம் 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை ஏற்கனவே அறிவித்த இடங்களில் நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இவ்விடைத்தாள் திருத்தும் பணி நேற்று முன்தினம் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்மாள் சமேத ஸ்ரீவிஸ்வநாத சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா இன்று காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறவுள்ளது.

மஹோற்சவத்தின் 8 ஆம் திருவிழாவான சப்பறம் 22 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.30 மணிக்கும் 9 ஆம் திருவிழாவான இரதோற்சவம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் தீர்த்தம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampuriijaffna@gmail.com

# சேவை நலன் பாராட்டு





தனது 53 ஆவது வயதில் ஓய்வு பெற்றுச் செல்லும் எமது பாடசாலை ஆசிரியர் திருமதி சறோஜினி அருணகிரிவாசன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.**

(2613)

# சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்





ஆரம்பப் பிரிவின் பகுதித் தலைவரும் 26 வருடங்கள் இப்பாடசாலையில் சேவையாற்றி தனது 55 ஆவது அகவையில் ஓய்வுபெறும் திருமதி சாந்தினி கனகநாயகம் அவர்களைப் பல்லாண்டு காலம் பாரினில் சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்

**பாடசாலைச் சமூகம்**
**யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.**

(2612)

# புனித பிலிப்புநேரியார் யாத்திரை ஸ்தல திருவிழா

## செம்பியன்பற்று
## 17.05.2013 - 26.05.2013



எதிர்வரும் 17.05.2013 அன்று மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் திருப்பலிகள் மாலை 5 மணிக்கும், நற்கருணை வழிபாடு 25.05.2013 மாலை 5 மணிக்கும் திருவிழாத் திருப்பலி 26.05.2013 காலை 7 மணிக்கும் நடைபெறும்.

**பக்தர்களின் வசதி கருதி,**

- ✔ யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
- ✔ திருவிழாக் காலத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்புவோர் 17.05.2013 ஆம் திகதிக்கு முன்னர் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
- ✔ 26.05.2013 அன்று மாலை 7.30 மணிக்கு மரியதாசன் நாட்டுக் கூத்தும் நடைபெறும்.

(2629) **- பங்குத் தந்தை**

# சம்பூர் மின் நிலையத்தால் ஆண்டுக்கு 7.3 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படும்

## ஊழலுக்கு எதிரான அமைப்பு குற்றச்சாட்டு

சம்பூர் நிலக்கரி மின் நிலையம் அமைக்கப்பட்டதன் பின்னர் ஆண்டுக்கு 7.3 பில்லியன் ரூபா இலங்கை மின்சார சபைக்கு மேலும் நட்டம் ஏற்படும் என்று ஊழலுக்கு எதிரான கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை ஏற்கனவே நட்டமடைந்துள்ள நிலையில் இன்னும் நட்டமடையும் என்றும் அவ்வமைப்பு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. இந்த மின் நிலையத்தை அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் உள்ள முறைகேடு காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் பேச்சாளர் சமன் தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

குறைந்தளவு வினைத்திறனுள்ள மின் உற்பத்தி தொகுதியை அமைப்பதற்கான ஒப்பந்தம் காரணமாக ஆண்டுக்கு 4.9 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படவுள்ளது என்றும் தரக்குறைவான அந்த தொகுதியை பராமரிக்க ஆண்டுக்கு 1.2 பில்லியன் ரூபா கூடுதலாக தேவைப்படும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும் சம்பூர் மின் உற்பத்தியில் கிடைக்கும் இலாபம், சர்வதேச நியமனங்களுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு 1.2 பில்லியன் ரூபா குறைவானதெனலாம். இந்த அடிப்படையில் சம்பூர் மின் உற்பத்தி நிலையம் மொத்தமாக ஆண்டுக்கு 7.3 பில்லியன் ரூபா நட்டம் அடையவுள்ளது. இந்த நட்டத்தை இவ்வாறான பாதகமான ஒப்பந் தத்திற்கு காரணமான அதிகாரிகளிடமிருந்து அறவிட வேண்டும் என்றும் அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டமைப்பானது மின் கட்டண அதிகரிப்பை எதிர்த்து இன்று புதன்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-2)

## பாம்பை விழுங்கி வித்தை காட்டும் நபர்

பாம்பை விழுங்கி பின்னர் அதனை வெளியில் எடுத்து வித்தைகாட்டி மக்களை குஷிப்படுத்தும் செயற்பாடு ஒன்றை காவத்தை பெல்மதுளையைச் சேர்ந்த நபர் ஒருவர் மேற்கொண்டு வருகிறார்.

பெல்மதுளை பட்டலந்தவில் வசிக்கும் சுனில் சாந்த என்பவரே இவ்வாறு பாம்பின் தலைப்பகுதியை மட்டும் வெளியில்விட்டுஏணைய பகுதியைவிழுங்கி இந்த சாதனையைபடைத்து வித்தை காட்டி வருபவர்.

இவர் சுமார் ஒன்றரை அடி நீளமான பாம்பின் தலைப்பகுதியை கையில் பிடித்து ஏனைய பகுதிகளை விழுங்கி நிமிடங்கள் வரை வைத்திருந்து அதன் பின் வெளியே எடுப்பார். இதன் வால் பகுதியை வாயில் நுழைத்திட இன்னு மொரு இளைஞர் அவருக்கு உதவி செய்வார்.

இவர் இதற்கு முன் லொறி ஒன்றை கொக்கியின் மூலம் வாயில் கௌவிப் பிடித்து இழுத்து சாதனை படைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்:பரணி 2<br>உயரம் : 6'3"<br>கி.பா:- 6<br>தகைமை/தொழில்: BA, MA ஆசிரியர்<br>தொ.இ: B -497 | பிறப்பு: 1991 இந்து (SA)<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>உயரம்:5'9"<br>கி.பா: 20, 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L, HNDM<br>தொ.இ: G -702 |
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம் 1<br>உயரம்: 5'1"<br>கி.பா: 39, 8 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L தொழில்நுட்பக் கல்லூரி தனியார்<br>தொ.இ: B -503 | பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம் : 5'4"<br>கி.பா: 17<br>தகைமை/ தொழில்:A/L (BIT) முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G-703 |
| பிறப்பு: 1974 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>உயரம்: 5'11"<br>கி.பா: 16.25<br>தகைமை/ தொழில்: Civil Engineer<br>தொ.இ: B -504 | பிறப்பு: 1973 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'<br>கி.பா: 12.75<br>தகைமை/ தொழில்: BA, ஆசிரியர்<br>தொ.இ: G -706 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>உயரம்: 5'6"<br>கி.பா:12.75, 12இல் செவ்<br>தகைமை/தொழில்: BSc Engineering, MSc Accs. (Engineer, Canada Student Visa)<br>தொ.இ: B -505 | பிறப்பு: 1976 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 2<br>உயரம்: 5'4"<br>கி.பா: 58<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -707 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி




நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்குத் தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

இன்றே அழையுங்கள்: (011) 4 218 218

Nations Trust Bank
Nations Leasing

(சி/3334)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நியூ சன் செரமிக்ஸ் (பிரை) லிமிடட்

நேர்த்தி - தரம் - நியாயமான விலை

(C-3336)

**Head Office :**
# 191, Messenger Street, Colombo 12.
Showroom Tel : 011 2449828, 011 2390680
Office Tel : 011 2390660 Fax : 011 2432879

**Branch :**
A9 Road,
Kilinochchi.
Tel : 021-2283872

Web : www.newsunceramics.com | Email : amuthan@newsunceramics.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜோதிடக்களம்

# திருமண பந்தத்தில் நெருக்கடி தரும் விதி! நிவர்த்தி தரும் விதிவிலக்கு!

ஜோதிடம் என்பது வேதத்தின் ஒளிபொருந்திய கண்ணாகக் கருதப்படுகிறது மக்கள் உய்த்துணர வேண்டுமென்ற நோக்கில் ஜோதிடக்கலையை மாமுனிவர்கள் உலகிற்கு வழங்கினார்கள். மனித வாழ்க்கை ஒரு கட்டுக்குள் இருத்தல் அவசியம் என்பதற்காக ஜோதிடத்தில் பல விதிகளை வகுத்தனர். ஆயினும் மக்கள் மேல் உள்ள கருணையினால் சில விதிவிலக்குகளையும் கண்டறிந்து கூறியுள்ளனர். அத்தகைய சில விதிகளையும் விதிவிலக்குகளையும் பார்ப்போம். விதி, பௌர்ணமி, அமாவாசை வராத விஷ மாதங்களிலும் இரண்டு பௌர்ணமி, இரண்டு அமாவாசை வரும் மல மாதங்களிலும் எந்த சுபகாரியமும் செய்யக்கூடாது.

விதிவிலக்கு சித்திரை, வைகாசி மாதங்களுக்கு மட்டும் விஷ, மல மாத தோஷம் கிடையாது.

விதி எந்த நல்ல செயல்களையும் நல்ல நேரம் பார்த்துத்தான் செய்தல் வேண்டும்.

விதிவிலக்கு அபிஜித் முகூர்த்தமான பகல் 12.00 மணிக்கும் சூரிய உதய அஸ்தமன காலமான கோதூளி முகூர்த்த நேரத்துக்கும் சுப ஹோரை சமயத்துக்கும் சந்திரன் ரோகிணி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலத்துக்கும் லக்னம், கேந்திரம் கோணங்களில் குரு இருக்கும் காலத்துக்கும் எவ்வித தோஷமும் கிடையாது. மேற்கண்ட காலங்களில் எல்லாவித நல்ல விடயங்களையும் செய்யலாம்.


விதி சூரியன் இராசியில் பிரவேசிக்கும் நாள் சங்கரமண தோஷமுள்ள நாளாகும். விதிவிலக்கு சங் கரமணத்திற்கு முன்பும் பின்பும் உள்ள முப்பதுநாழிகை அல்லது 12மணிநேரமே தோஷமான காலமாகும். ஏனைய நேரத்திற்கு தோஷமில்லை.

விதி திதி கண்டாந்தம், நட்சத்திர கண்டாந்தம் ஆகியவை தோஷமாகும். விதிவிலக்கு லக்னத்தில் சுபர் இருப்பதும் லக்னத்திற்கு சுபர் தொடர்பு சம்பந்தமும் தோஷத்திற்கு விலக்களிக்கிறது. விதி மீனம், மேடம், கடகம், சிம்மம், விருச்சிகம், தனுசு ஆகிய இராசிகளுக்கிடையே உள்ள 24 நிமிட நேரம் இராசி கண்டாந்த தோஷமாகும். விதி விலக்கு குரு அல்லது சந்திரன் லக்னத்துக்கு சுபர்களாகி பலம் பெற்றாலும் கேந்திரகோணத்தில் இருந்தாலும் தோச நிவர்த்தியாகும்

விதி ஒவ்வொரு நாளிலும் த்யாஜயம் எனும் விஷ கடிகை நேரம் உள்ள லக்னத்தை தவிர்க்க வேண்டும். விதி விலக்கு மேற்படி லக்னத்துக்கு சுபர் பார்வை ஏற்பட்டால் தோசம் கிடையாது.

திருமணம் சம்பந்தமான விதிகளும் விதி விலக்குகளும்

விதி ஆண், பெண் திருமணத்தின் போது பெண் நட்சத்திரத்திலிருந்து ஆண் நட்சத்திரம் வரை எண்ணி வந்த எண்ணை 9 ஆல் வகுத்தால் மீதி 3, 5, 7 என வந்தால் தினப் பொருத்தம் இல்லை. விதி விலக்கு மேற்கொண்ட தினப் பொருத்தத்தில் 5 ஆவது நட்சத்திரம் விதிவிலக்காகும். ஐந்தும் ஆறும் கொஞ்சி வாழும் என்ற விதிப்படி 5 ஆவது நட்சத்திரத்திற்கு விதி விலக்கு உண்டு.



விதி திருமணப் பொருத்தம் பார்க்கும் போது மணமக்களின் தனிப்பட்ட ஜாதகத்தில் செவ்வாய் 2, 4, 7, 8, 12 இல் இருந்தால் தோசம். இது செவ்வாய் தோசம் எனப்படும்.

விதி விலக்கு ஜாதகத்தில் செவ்வாய் தனது ஆட்சி உச்ச நீச வீடுகளில் இருந்தாலும் குரு, சந்திரன் சேர்ந்தாலும் சனி, இராகு, கேது இவர்களுடன் கூடினாலும் நட்பு வீட்டில் இருந்தாலும் செவ்வாய் தோசமில்லை . விதி திருமணத்துக்கு ஆண், பெண் இருவரும் ஒரே கணத்தில் அமை தல் நல்லது.

விதி விலக்கு பெண் இராட்சச கணத்தில் இருந்தாலும் ஆண் நட்சத்திரத்துக்கு 14 ஆம் நட்சத்திரத்துக்கு மேல் இருந்தால் நல்லது. கணப் பொருத்தம் இல்லாவிட்டாலும் ஆண், பெண் இருவரும் ஒரே இராசியில் இருப்பது இராசியதிபதி கள் நட்பாக இருப்பது போன் றவை விதி விலக்காகும்

விதி பெண் இராசிக்கு 2 ஆம் இராசியாக ஆண் இராசி வந்தால் திருமணப் பொருத்தம் கிடையாது.

விதி விலக்கு பெண் ஒற்றை இராசிகளில் ஏதாவது ஒன்றில் பிறந்திருந்தால் விதி விலக்காகும். விதி திருமணத்திற்கு ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம் அவசியம். விதிவிலக்கு பொருத்தம் பார்க்கும் போது ஸ்திரீ தீர்க்கம் இல்லாவிட்டாலும் இராசிப் பொருத்தம், இராசியதிபதி பொருத்தம் இருந்தால் விதி விலக்காகும். விதி திருமணத்திற்கு இராசியபதி பொருத்தம் அவசியம். விதி விலக்கு இராசியபதி பொருத்தம் இல்லையென்றாலும் பெண்பிள்ளை இருவரும் ஏக இராசி (ஒரே இராசி) அல்லது சமசப்தம இராசிகளில் இருந்தால் விதி விலக்குண்டு.

விதி மணப் பொருத்தத்தில் நாடிப் பொருத்தம் அவசியம். விதி விலக்கு நாடிப் பொருத்தம் இல்லையென்றாலும் இராசி ரஜ்ஜுப் பொருத்தம் இருந்தால் போதுமானது.

விதி; ஆண், பெண் இராசி சஷ்டாஷ்டகமாக அமைவது கூடாது.

விதி விலக்கு; பெண்ராசி ஒற்றைப்படை இராசியாக இருப்பின் விதி விலக்குண்டு

விதி; திருமணப் பொருத்தம் எல்லா வகையிலும்பொருந்திஇருக்கவேண்டும்.

விதி விலக்கு; மணப் பெண், மணமகன் இருவரும் ஒரே இராசியாக இருந்தாலும் இராசியதிபதிகள் நண்பர்களாக இருந்தாலும் ஒருவரின் 7 ஆம் அதிபதி மற்றவருக்கு லக்னமாக இருந்தாலும் ஒருவரின் லக்னம் மற்றவருக்கு இராசியாக அமைந்தாலும் ஏனைய பொருத்தங்கள் இல்லையென்றாலும் பரவாயில்லை.

விதி; ஆண் ஜாதகத்தில் களத்திர காரகன் சுக்கிரன் லக்னத்திற்கு 7 இல் இருந்தால் தோஷம் .

விதி விலக்கு;ஆண் ஜாதகத்தில் 7இல் சுக்கிரன் இருக்க பெண் ஜாதகத்தில் சுக்கிரன் 6,7,8 ஆம் வீட்டில் இருந்தால் தோஷ நிவர்த்தியாகும். அது மட்டுமல்லாது பெண் ஜாதகத்தில் சுக்கிரன் சனியுடன் இருந்தாலும் சனி பார்வையுடன் சுக்கிரன் இருந்தாலும் ஆணின் களத்திர தோஷத்திற்கு நிவர்த்தி மற்றும் விதி விலக்குண்டு.

விதி;பெண்களுக்கு மாங்கல்ய ஸ்தானம் கெடக்கூடாது.

விதி விலக்கு;பெண்ஜாதகத்தில் மாங்கல்ய ஸ்தானம் கெட்டிருந்தால் ஆண் ஜாதகர் உத்தம தீர்க்காயுள் நட்சத்திரங்களான அச்சுவினி, மகம், மூலம், கார்த்திகை, ஆயிலியம், அனுஷம், சதயம், பூரம் முதலாம் மூன்றாம் பாதங்கள். உத்தரம் முதல் பாதம் ஆகிய ஒன்பது நட்சத்திரங்களில் ஒன்றில் பிறந்து ஏனைய ஆயுள் பாவம் தீர்க்கமாக இருப்பின், பெண்களின் மாங்கல்ய தோஷம் நிவர்த்தியாகும்.

விதி; சூரியனும் செவ்வாயும் எந்த பாவத்தில் சேர்ந்திருந்தாலும் மாங்கல்ய தோஷமுண்டு.

விதி விலக்கு ; சூரியனும் செவ்வாயும் வெவ்வேறு பாகையில் இருந்தாலும் சுபர் பார்வை இருந்தாலும் தோஷத்திலிருந்து விதி விலக்குண்டு.

விதி ;குருவும் சந்திரனும் 6/8 எனும் சஷ்டாஷ்டகத்தில் இருந்தால் சகடை யோகம் வாழ்க்கை வண்டிச் சக்கரம் போல் ஏற்ற, இறக் கமாக இருக்கும்.

விதி விலக்கு;சந்திரன் தேய்பிறைச் சந்திரனாக இருந்தால் தோஷம் பின்னமாகி விதி விலக்கு ஏற்படுகிறது.

இவ்வாறு ஜோதிடத்தில் நிறைய விதிகளும் விதி விலக்குகளும் கூறப்பட்டுள்ளன. சூரியன் 11 இல் நிற்பது எல்லா தோஷத்திற்கும் விதிவிலக்கு என கூறப்பட்டுள்ளது. அதுபோலவே விஷ, மல மாதங்களை விலக்க வேண்டும் என்று கூறப்பட்டாலும் தனுசு, மீனம், கடகம் போன்ற ஆட்சி, உச்ச வீடுகளில் குரு இருந்து சூரியனும் ஆட்சி, உச்ச இராசியிலோ, சூரிய அம்சத்திலோ இருந்தாலும் மாத தோஷங்கள் விலகி விடும் என கூறப்பட்டுள்ளது. நெருக்கடி மிகுந்த மனித வாழ்வில் விதிகள் எவ்வளவு அவசியமோ, அது போல விதிவிலக்குகளும் தேவையாகத் தான் உள்ளன.

எனவே, அவசர அவசியத்துக்கு விதிவிலக்குகளைப் பயன்படுத்தி வாழ்க்கைப் பயணத்தைத் தொடரலாம். விதிவிலக்குகளை இறைவன் மற்றும் மாமுனிவர்களின் பெருங் கருணை என்றே கூறவேண்டும்.

# வடக்கில் தேர்தல் நடத்தாவிடின் வன்முறைகள் தோன்றலாம் - சஜித் எம்.பி.

வடமாகாணத்தில் தேர்தலை ஏன் நடத்தக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் வட மாகாணசபைத் தேர்தலை த் தடுத்து நிறுத்த வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச முயற்சி எடுத்து வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் ஏனைய அனைத்து மாகாணங்களிலும் தேர்தல் நடத்துவதில் தவறில்லை என்றால், வடக்கில் தேர்தல் நடத்துவதிலும் தவறு இல்லையே என அவர் கேட்டுள்ளார்.

இவ்வாறு வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துவதை தவிர்ப்பதால் பிரதேச மக்களின் ஜனநாயக உரிமைகள் முடக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டாம் எனக் கூறுவதன் மூலம் அந்தப் பிரதேச மக்கள் மீளவும் வன்முறையில் ஈடுபடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்ச ஏனைய மாகாணங்களில் நடைபெற்ற தேர்தல்களில் தமது கட்சியின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தி வெற்றி ஈட்டியுள்ளதாகவும் தற்போது வட மாகாணசபைத் தேர்தல் அரசியல் சாசனத்திற்கு முரணானது என தெரிவிப்பது அர்த்தமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகளை முடக்குவதற்கு அரசு மேற்கொள்ளும் இதுபோன்ற முயற்சிகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(அ-2)

# காற்றுடன் மழை பொழிய முன்பு துர்நாற்றம் வீசியது

(புளியம்பொக்கணை)

சுண்டிக்குளம் கடற்பரப்பிலிருந்து துர்நாற்றம் வீசிய பின்னர் காற்றுடன் கூடிய மழை பெய்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 8 மணியளவில் சுண்டிக்குளம் கடற்கரைப் பகுதியில் இருந்து துர்நாற்றம் வீசியதுடன் அது கண்டவளை, பிரமந்தனாறு, தருமபுரம், மயில்வாகனபுரம் ஆகிய நீண்ட பிரதேசங்கள் வரை 20 நிமிடங்கள் வரை நிலைத்திருந்ததாகவும் இதனையடுத்தே அங்கு காற்றுடன் கூடிய மழை பெய்ததாகவும் இப்பகுதி மக்கள் தெரி விக்கின்றனர். (அ-263)

# மாற்றுவலுவுடையோரை சந்திக்கிறார் அமை. டக்ளஸ்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாற்றுவலுவுடையோர், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு காலாசார மண் டபத்தில் சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திப்பில் மாற்றுவலுவுடையோரில் வறுமைக்கோட்டுக்குட்பட்டவர்களின் தேவைகளை இனங்காணல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்று அரசாங்கத்தின் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான விண்ணப்பப்படிவங்களும் பதிவு செய்யப்படவுள்ளன. அத்துடன் இச்சந்திப்புக்காக மாற்றுவலுவுடையோருக்கு போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் முழங்காவில் மகாவித்தியாலயத்தின் முன்னும் பூநகரி பிரதேச செயலகத்தின் முன்னும் காலை 8 மணிக்கும் கண்டாவளை தருமபுரம் மகாவித்தியாலயத்துக்கு முன் காலை 9 மணிக்கும் வன்னேரி மகாவித்தியாலயத்திலிருந்து காலை 8.30 இற்கும் பளை பிரதேச செயலகம் முன் காலை 9 மணிக்கும் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகரத்து மக்கள் கலந்துரையாடல் நடைபெறும் இடத்திற்கு நேரடியாகவே வந்து கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.


இக்கலந்துரையாடலுக்கான ஏற்பாட்டை கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலர் ஆகியோர் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

456



## புதையல்

தண்டகாரன்ய மலையடிவாரத்தில் இருந்த கிராமங்கள் ஒன்றில்,சோமு வசித்து வந்தான். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த அவனுக்கு சொந்தம் என்று சொல்லிக் கொள்ள இருந்தது ஒரு பழைய வீடு மட்டுமே!

திடகாத்திரமான உடலை அளித்திருந்த இறைவன், உழைப்பின் மேன்மையை அடையும் அளவுக்கு மூளையைத் தரவில்லை. உடலை வருத்திக் கொள்ளாமல் எது கிடைத்தாலும் அதைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டிய சோம்பேறியாகத் திகழ்ந்தான்.

ஒரு நாள் தன் வீட்டின் பானைத் தோண்டித் துழாவி ஏதாவது தேறுமா என்று தேடியவனுக்கு ஒரு பழைய பெட்டி கிடைத்தது. விற்று காசு புரட்ட குண்டான், தவலை என்ற தேடியவனுக்கு, பெட்டி ஏமாற்றத்தை அளித்தது. இருந்தாலும் அதையும் திறந்து உள்ளே ஏதாவது தேறுமா என்று பார்த்தான். ஓட்டை, உடைசல்களுக்கடியில் ஒரு ஓலைச்சுவடி தென்பட்டது.

அதை சுவாரஸ்யமில்லாமல் படிக்க அதில் கண்ட வாசகங்கள் அவனை திடீரென பரபரப்படையச் செய்தன. அதில் சந்திரகிரி கிராமத்தில் உள்ள ஒரு பாழடைந்த கோயிலில் புதையல் இருப்பதாக பொறிக்கப் பட்டிருந்தது. உடலை வருத்தாமல் குறுக்கு வளியில் பணம் புரட்ட எப்போதும் தயாராக இருந்த சோமு, மறு நாள் காலையே தன் வீட்டையும்,கிராமத்தையும் விட்டு விட்டு புதையலைத் தேடிப் புறப்பட்டான். அடுத்த நாள் சந்திரகிரிக் கிருந்த தூரத்தில், பாதிதூரம் கடந்த பின் மேற்கொண்டு நடக்க இயலாமல், இடைப் பட்ட கிராமத்து நாட்டாமை வீட்டுக்குச் சென்றான். அவர் பெயர் மருது. அவரை வணங்கிய சோமு, "ஐயா! நான் சாப்பிட்டு இரண்டு நாளாகிறது. பசி மயக்கத்தில் என்னால் ஓரடிகூட எடுத்து வைத்து நடக்க முடியவில்லை. நானோ சந்திரகிரிவரை நடக்க வேண்டும். எனக்கு சாப்பிட ஏதாவது தாருங்கள்" என்று கெஞ்சினான்.

அவனை மேலும் கீழுமாகப் பார்த்த மருது, பிறகு அவனை உட்காரச் சொல்லி வயிறு புடைக்க விருந்து படைத்தார். மிதமிஞ்சிய நன்றியுடன் அவரை வணங்கிய சோமு, "ஐயா யாரோ முன் பின் தெரியாத எனக்கு இப்படி அருமையான விருந்து படைத்த உங்களைப் போன்ற வள்ளலுக்கு நான் எப்படி கைம்மாறு செய்வேன்?" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூற "எப்படி செய்வதா! சொல்கிறேன் கேள்! என் தொழுவத்தில் உள்ள பசு மாட்டுக்களை குளிப்பாட்டி விடு! பிறகு தொழுவத்தை நன்றாக சுத்தம் செய்,இப்படிச் செய்தால் பாதி நன்றிக் கடனைக் கழிக்கலாம்" என்றார் மருது.

## அம்புலிமாமா கதைகள்

அதைக் கேட்ட சோமு திடுக்கிட்டான். "வயிறார சோறு போட்டு விட்டு, அதற்குப் பிறகு கடுமையான வேலை வாங்குவார் என்று முன்னமே தெரிந்திருந்தால் சாப்பிட்டிருக்கவே மாட்டேனே!" என்ற எண்ணிக் கொண்டே, வேண்டா வெறுப்பாக அவர் சொன்ன வேலைகளை செய்தபின் வீட்டின் முன் வாயிலில் படுத்துறங்கினான். மறுநாள், யாரோ தன்னை எழுப்புவதைக் கண்டு உறக்கத்தில் இருந்து சோமு விழிக்க, நாட்டாமைதன் கைத்தடியினால் அவனைத் தட்டியெழுப்பக்கண்டான். "ஏன்டா? எத்தனை நேரம் தூங்குவாய்? எழுந்திரு! மாடுகளை மேய்க்க அழைத்துப் போ!" என்று விரட்ட, சோமு திருதிருவென தூக்கக் கலக்கத்தில் விழிக்க, தன் குரலை உயர்த்திய நாட்டாமை "என்னடா அப்படிப் பார்க்கிறாய்? நேற்று நீ கொட்டிக் கொண்ட சோற்றுக்குப் பாதிவேலை மட்டும் தான் செய்து இருக்கிறாய். மீதி வேலையை இப்போது செய்!" என்று கட்டளையிட்டார்.

சோமு முணுமுணுத்துக் கொண்டே மாடுகளை மேய்க்கச்சென்றான். பிறகு அவனுக்கு நன்றாக சோறு போட்ட நாட்டாமை அதற்குப் பதிலாக மாலை, இரவு, மறுநாள் கலை என்று வேலை வாங்கினார். எப்போது தப்பியோடலாம் என்று முயன்றாலும், "நீ சாப்பிட்ட சாப்பாட்டுக்கு பாக்கி வேலை இருக்கிறது" என்று ஏதேதோ கணக்கு சொல்லிக் குழப்பினார். சோமுவுக்கு வெறுத்துப் போயிற்று. நாட்டாமையின் நண்டுப்பிடியில் சிக்கியவனுக்கு தப்பிக்கவே முடியவில்லை. இப்படியே போனால் மாட்டுத்தொழுவத்திலேயே தன் வாழக்கை முடிந்துவிடும் என்று அஞ்சி, சொல்லாமல் கொள்ளாமல் சோமு ஒரு நாள் அங்கிருந்து ஓடிவிட்டான்.



கடைசியாக சந்திரகிரி கிராமத்தை அடைந்த சோமு, ஊர் எல்லையில் ஒரு யோகியை சந்தித்து பாழடைந்த கோவிலுக்கு வழி கேட்டான். அந்த யோகியும் பலேயோகியாக இருந்தார். அதைப் பற்றிய தகவல் வேண்டுமானால் தனக்கு சில நாட்கள் சேவை செய்ய வேண்டும் என்றார். அதாவது காலையில் எழுந்து ஆசிரமத்தைப் பெருக்கி, சாணமிட்டு மெழுகி, தண்ணீர் கொண்டு வந்து, நந்தவனத்தில் இருந்த பூக்கள் பறித்து வந்து, காட்டுக்குப் போய் பழங்கள் சேகரித்து வந்து என்று, முடிவில்லாமல் வேலைகளைச் சொல்லிக்கொண்டே போனார். சரிதான் போங்கள் சாமி என்று சொல்லி ஓடிவிடலாம் போலிருந்தது சோமுவுக்கு. ஆனால், அப்புறம் எப்படி பாழடைந்த கோவிலைக் கண்டு பிடித்து புதையலை எடுப்பது? தலையெழுத்தே என்று யோகியின் மனம் குளிரும்படி அல்லும், பகலும் சேவை செங்தான்.

ஒருநாள் சோமு யோகியின் காலைப்பிடித்து விட்டுக் கொண்டே தூங்கி ஆடினான். அவன் முதுகைத் தட்டியெழுப்பிய யோகி, "என்னப்பா பாழடைந்த கோவிலை மறந்தாயா?" என்றார். உடனே, சோமுவின் தூக்கம் "கப்" பென்று கலைந்து, அவன் "டக்" கென்று நிமிர்ந்தான்.

"என்ன வார்த்தை கேட்டீர்கள் சுவாமி! அதைத்தானே சதாசர்வகாலமுமம் நினைத்துக்கொண்டு இருக்கிறேன்" என்று பதறினான் சோமு.

"அங்கு என்ன வேலை உனக்கு?"

என்று யோகி குடைய, உடனே சோமு கப்சிப் என்று அடங்கிப்போனான்.

"சொல்லப்பா? புதையலைத் தேடித்தானே அங்கே போக விரும்புகிறாய்?" என்று யோகி கேட்க, சோமுவுக்கு முகத்தில் அசடு வழிந்தது. இவர் பலே யோகிதான் என்று எண்ணிய சோமு "ஆமாம்" என்று ஒப்புக்கொண்டான்.

"இதுவரை அங்கு போனவர்கள் யாருக்கும் புதையல் கிடைக்கவில்லையே சோமு!" என்று அடுத்து யோகி சொன்னதும், இடி விழுந்தது போலாயிற்று சோமுவுக்கு.

"என்ன அப்படியா?" என்ற சோமு பிறகு சுதாகரித்துக் கொண்டு, "பரவாயில்லை. நான் அங்கு போய் என் கண்ணால் பார்க்க விரும்புகிறேன்" என்றான். அதன் பிறகு யோகியிடம் வழியைக் கேட்டுக்கொண்டு சோமு பாழடைந்த கோயிலுக்குச் சென்றான்.

கொடிகளும், முட்செடிகளும் படர்ந்து வெளியுலகின் பார்வைக்குத் தெரியாமல் மூடி கிடந்த கோயிலுக்குள் சோமு மிகவும் சிரமப்பட்டு நுழைந்தான். கருவறையில் அம்மனின் விக்கிரகத்தைச் சுற்றிச் சுற்றி வந்தான். ஒன்றும் கிடைக்கவில்லை. கோயிலின் பிரகாரத்தைச் சுற்றி வந்தான் அங்கும் ஒன்றும் கிடைக்கவில்லை. பிறகு, தரையில் தேடுவதை விட்டுவிட்டு, சவர்களில் ஏதாவது இரகசியக் கதவு இருக்கிறதா, அதைத் திறந்தால் புதையல் கிடைக்குமா என்ற பிரகாரச் சுவர்களைத் தடவித் தடவிப் பார்த்தான். கடைசியில், ஓரிடத்தில் கோயில் சுவற்றில் தாமிரத்தகடு பொருத்தப்பட்டு இருந்தது. அதில் சில வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றை சோமு சிரமப்பட்டு படித்தான். அதில் "இதற்குள் கடுமையான உழைப்பின் மகத்துவத்தை நீ அறிந்து கொண்டு இருப்பாய். இதை விட விலை மதிப்புள்ள வேறு ஏதாவது உண்டு என்று யார் சொன்னாலும் நம்பாதே. கடின உழைப்பே புதையலாகும்" என்று பொறிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டேன் சித்தர் பெருமானை



04 அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

திரு. கலைவாணன் கண்ணதாசன் அவர்கள், அமரர் திரு.கவியரசு கண்ணதாசன் அவர்களின் புதல்வர்களில் ஒருவர் முன்னாள் இயக்குனர். ஜி.என்.ரங்கராஜன் அவர்களிடம் உதவியாளராக பணியாற்றியவர், என்னுடைய நெருங்கிய நண்பர். அவருக்கு இயக்குனர் வாய்ப்பு ஒன்று வந்தது. புதுப்படங்கள் எடுக்க ஆயத்தங்கள் முடிந்து, படப்பிடிப்பு துவங்கும் நேரம் நெருங்கியது. அதனால் அவரை அழைத்துச் சென்று சித்தரிடம் ஆசிபெறவைக்கலாம் என்ற எண்ணத்துடன் நண்பரை பெரம்பலூரில் சித்தர் பெருமானிடம் அழைத்துச் சென்றேன். நாங்கள் சித்தர் அவர்களின் ஆச்சிரமத்திற்குள் நுழைந்தோம். அங்கு அவரைக் காணவில்லை. ஆச்சிரமத்தில் அப்போது இருந்த நண்பர், சாமி அரசமரத்தடியில் அமர்ந்திருப்பதாகச் சொல்லவும், நாங்களும் அங்கு சென்றோம். அங்கு சித்தர்கள் தனியாக அமர்ந்திருந்தார்கள். என்னைப் பார்த்தவுடன் மகிழ்ச்சி துள்ள, ராஜா வந்தாச்சு! ராஜா வந்தாச்சு! என்று சப்தமிட்டது, இப்போதும் என் காதில் ஒலிக்கிறது. இதுபற்றி அவரிடம் விளக்கம் கேட்டேன். அதற்கு அவர் சிரித்தவாறே, ராஜா என்றுதான் அழைத்து இருக்கின்றேன்! அதனால்தான் இன்றும் அப்படி அழைத்தேன். இந்தப்பிறவியில் என்னுடன் சேரும் சமயம் இப்பத்தான் வந்தது. நீயும் வந்தாய், அதனால் மகிழ்ச்சி மேலிட்டதால், உன் பெயரைக் அப்படிக் கூப்பிட்டேன் என்றார். இதைக் கேட்டதும் எனக்கு ஒன்றும் புரியவில்லை. நண்பர் கலைவாணன் என்னை அதிசயப் பொருளைப் பார்ப்பதுபோல், ஒரு மாதிரியாக பார்த்தார். சற்றுச் சமாளித்த நான். நண்பரை சுவாமிக்கு அறிமுகம் செய்து அவர் ஆசி வழங்கியதன் பின்னர், (அதற்குள் வேறுசிலர் அவரிடம் வரவே) நாங்கள் சித்தரிடமிருந்து விடைபெற்றோம். சென்னைக்கு திரும்பும்போது வழி எல்லாம் என் காதில் சித்தர் அழைத்த ஒலி, (ராஜா வந்தாச்சு, ராஜா வந்தாச்சு) மீண்டும் மீண்டும் ரீங்காரமிட்டது. உடல் எல்லாம் இனம் புரியாத இரசாயன மாறுதல்கள் ஏற்பட்டு,



அடிக்கடி, உடல் சிலர்த்தது. பல பிறவி, இப்பிறவி நீர் சேரும் நேரம் வந்தாச்சு, நீ என்னுடன் இருந்தவன். என்று இதே வார்த்தைகள் என்னுடன் ஒலித்துக் கொண்டிருந்தது. ஒரே குழப்பம், ஏதோ புரிவது போலிருந்தது. புரியாதது போலவுமிருந்தது. என் மனம் சித்தர் பெருமானிடமே சரணடைந்தது, சேவையே இலட்சியமாகக்கொண்டுவிட்ட எனக்கு சினிமாக் கனவுகள் குறையத் துவங்கின. என் கனவுத் தொழிற்சாலைகள் தகர்ந்தன. பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் விட்டு, என்னை அறியாமல், மனதாலும், உடலாலும், தூரமாய் விலகிப் போய்க்கொண்டிருந்தேன். மனது முழுதும் சித்தர்பெருமான்தான் வியாபித்து நின்றார்! அங்கு வேறு யாருக்குமே இடம் இல்லை. நாட்கள் மாதங்களாயின, மாதங்கள் வருடத்தை நோக்கி வளர்ந்து கொண்டிருந்தன.

### நான் கண்ட கனவு

அப்போது கோழி கூவுது படம் இரவு பகலாக வேலை நடந்து கொண்டிருந்தது. அன்று அப்படத்தின் இறுதி நாள் வேலை, இரவு இரண்டு மணிக்கு முடிந்தது. சென்னையில் இருந்து, தாம்பரத்தில் இருந்த இல்லம் சென்று படுக்க, மேலும் ஒரு மணி நேரம் கடந்து சென்றது. படுத்தவுடன் அசதியால், அடித்துப்போட்டவன் மாதிரி, என்னை மறந்த ஆழ்ந்த உறக்கம், யாரோ என் பெயர் சொல்லி எழுப்புகிறார்கள், என்னால் கண்களை திறக்கமுடியவில்லை. யார்? இந்த நேரத்தில் தொல்லை! என்று உள்ளம் சலித்துக்கொள்கிறது, சினம் மூள்கிறது, அவர்களே! என்னை விடாது எழுப்பிக்கொண்டு இருக்கிறார்கள். எரிச்சலுடன் எழுந்து, உட்காருகின்றேன். எதிரில் வெள்ளைத் துண்டைக் கட்டிக்கொண்டு, மெலிந்த வெற்றுடம்பை ஒரு வெள்ளைத் துண்டால் போர்த்திக் கொண்டு மொட்டைத் தலையுடன் பழங்கால நாகரீகத்தில் பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியுடன், பொக்கை வாய் புன்னகையுடன் ஒரு உருவம் நின்றுகொண்டிருந்தது. எனக்கு அடையாளம் புரியவில்லை! ஆனால், எங்கோ அடிக்கடி பார்த்த பரீட்சயமான முகம்! யாரு? என்ன வேணும்?

(தொடரும்)

# சிங்கள, பௌத்த பேரினவாதம் நல்லது செய்யுமா?

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜே.ஆர். ஜெயவர்த்தன 1983-ல் தொடங்கிய இன அழிப்பை, இலங்கை சுதந்திரக் கட்சியின் மஹிந்த ராஜபக்ஷ 2009 இல் முடித்தார். தமிழின ஒடுக்கு முறையை யார் அதிகம் செய்வது என்பதில்தான் இரண்டு கட்சிகளுக்கும் போட்டி இருந்ததே தவிர, ஒன்றுபட்ட இலங்கை மக்கள் அனைவர் மீதும் இந்த அக்கறை இல்லை.

சிங்கள இனவாதத்தை தங்களது கட்சிக்கொள்கையாக மட்டும் அல்லாமல், இலங்கை அரசின் கொள்கையாக இந்த இரண்டு கட்சிகளும் மாறிவிட்டன. சிங்களத்தின் சின்னமான சிங்கமே, தேசியக்கொடியானது. சிங்களம் தான் இலங்கையின் ஆட்சிமொழி என்று 1956 இல் அறிவித்தனர். பௌத்த மதமே, அரசு மதம் என 1972 இல் பிரகடனம் செய்யப்பட்டது.

1987 இல், செய்யப்பட்ட அரசியல் யாப்பின்படி இது ஜனநாயக சோஷலிச குடியரசு. இக்குடியரசு ஒற்றையாட்சி அரசு என அறிவிக்கப்பட்டது. இதில் எந்த மாறுதலையும் செய்யமுடியாது. செய்யவேண்டுமானால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையும், பொதுஜன வாக்கெடுப்பு நடத்தித்தான் செய்ய முடியும்.

சிங்களத்துக்கு முக்கியத்துவம் கொடுத்ததன் மூலமாக தமிழ் விலக்கப்பட்டது. பௌத்தம், அரசு மதமாக அறிவிக்கப்பட்டதால், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியவை புறக்கணிக்கப்பட்டன.

ஒற்றையாட்சி என்று சொன்னதன் மூலமாக பல இனங்கள் சமத்துவமாக வாழும் ஒரு சம்ஷ்டி ஆட்சி முறைக்கு தடை விழுந்தது. அதாவது, இலங்கை என்பது பல்வேறு இனம், மதம், மொழி, பிரதேச அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட சமூக அமைப்பு என்பதை அரசியலமைப்புச் சட்டத்தில் மறைத்தனர். இந்த அடிப்படையில் சலுகைகள் பெறுவதை அரசியல் சட்டத்தின் மூலமாக தடுத்தும்விட்டனர்.



உலகத்தின் குற்றவாளிக்கூண்டில் நிற்கின்ற மஹிந்த ராஜபக்ஷ, தான் தப்பிப்பதற்காக தமிழர் நலவாழ்வு நாடகம் ஆட நினைத்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கைகளை நிறைவேற்ற நினைத்து, தமிழருக்கு சமவாய்ப்பும், சம அந்தஸ்தும் வழங்க முன்வந்தால் அதற்கு அந்த நாட்டின் அரசியல் சட்டமே இடம்தராது. பெரும்பான்மைச் சிங்களவர்கள் ஆதரிக்கும் நாடாளுமன்றத்தில் அந்தத் தாக்கல் செய்யவே முடியாது. அப்புறம்தானே நிறைவேற்றுவது. பெரும்பான்மைச் சிங்களவர்கள் ஆதரித்து வாக்களிப்பார்கள் என்று நம்புவதே மாயை.

மதச்சார்பின்மை பேசும் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட், பௌத்தமதம் சார்நத ஆட்சியை எதிர்த்து குரல் கொடுக்கவேண்டும் என்று சொல்லக் கூடியவர்களுக்கு இலங்கை அரசமைப்புச் சட்டம் அதற்கு இடம் தருகிறதா என்கிற தெளிவு முதலில் வரவேண்டும்.

சிங்களமொழி, பௌத்தமதம் ஆகிய இரண்டுக்கும் மாறாக எதைச் செய்வதற்கும் இலங்கையின் அரசியல், சமூக, மத, நிர்வாகவியல் சூழ்நிலை இடம் தராது, அரசமைப்புச் சட்டம் இடம் கொடுக்காது என்பதற்கு சமீபத்திய உதாரணம் ஒன்று...

1987இல் ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தம் நிறைவேறியது. பெரும்பான்மை தமிழர் வாழும் வடக்கு - கிழக்கு மாகாணத்தை ஒன்றாக்குவது அதில் முக்கியமான சரத்து. இதை இலங்கையின் கட்சிகள், பௌத்த பிக்குகள், அமைப்புகள் அனைத்துமே கடுமையாக எதிர்த்தன.

ஒவ்வொரு நாட்டுக்கும் நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பது அந்தந்த நாட்டின் உச்சிநீதிமன்றம். இலங்கை உச்ச நீதிமன்றத்தில் இந்த சரத்தை எதிர்த்து ஜனதா விமுக்தி பெரமுனா வழக்குப் போட்டது. தமிழர்களுக்கு ஒரளவாவது நன்மை பயக்கும் இந்த சரத்தை உச்சநீதி மன்றம் நிராகரித்துவிட்டது.

இலங்கை ஒரு கூட்டாட்சியோ குடியரசோ கிடையாது. இது ஓர் ஒற்றையாட்சி அரசமைப்பு. அரசு மதம், பௌத்தம், அரசுமொழி, சிங்களம், ஒற்றையாட்சி அரசமைப்பில் மொழி வழியாகவோ, இன வழியாகவோ மாகாணங்கள் அமைக்க, இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் இடம் இல்லை என்று, தீர்ப்பளித்த பிறகு இலங்கை அரசாங்கத்திடம் வெறும் கோரிக்கை ஆர்ப்பாட்டங்கள் நடத்திக்கொள்வது நாள் கடந்த, கணக்குக் காட்டப்பயன்படும் தவிர நேர்மையானதாக இருக்காது. இது குறிப்பான நிலைமைகளில் குறிப்பாகப் பொருத்திப் பார்க்கப்படும் அறிவியல் பார்வை அல்ல!

சிங்களமே ஆட்சிமொழி என்ற தீர்மானம் வந்தபோது, இலங்கை இடதுசாரிகள் கடுமையாக எதிர்த்தனர்.

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா சொன்னார். இரு மொழி எனில் ஒரு நாடு! ஒரு மொழி எனில் இரு நாடுகள்!

-விகடன்- முற்றும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புகலிடக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்பாதீர்- அரியம் எம்.பி.

(மட்டக்களப்பு)

புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதை குறித்த நாடுகள் கைவிடவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,கனடா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் புகலிடத் தஞ்சம் கோரிய பலர் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட இருப்பதாக அண்மையில் செய்திகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இவ்வாறு புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டால் அவர்கள் இலங்கை குற்றப் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

அண்மைய நாட்களில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த மட்டக்களப்பைச் சேர்ந்த இரு குழந்தைகளின் தாயும் விதவையுமான ஒரு பெண் இவ்வாறு விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வாளர்களினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

எனவே, இரு குழந்தைகளின் தாயாகிய ஒரு பெண்ணே மனிதாபிமானமற்ற முறையில் இவ்வாறு கைது செய்யப்பட்டால், இளைஞர்களின் கதி என்னவாவது?

எனவே, கனடா மற்றும் அவுஸ்திரேலியாவில் இருந்து புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதைக் குறித்த நாடுகள் மீள் பரிசீலனை செய்து, அவர்களுக்கும் புகலிடம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இறக்குமதி செய்யப்பட்ட பால்மா வகைகளை பரிசோதியுங்கள்

## அமைச்சர் சம்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் இரசாயன பதார்த்தங்கள் கலந்துள்ளனவா என்பது குறித்து ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க அணுசக்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நியூசிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மா, பால் உணவுகளிலும் இரசாயன பதார்த்தங்கள் கலந்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையிலேயே அமைச் சர் இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் ரின் மீன்கள் மற்றும் மீன்களின் வகைகளின் மாதிரிகளை அணுசக்தி அதிகார சபை பரீட்சித்து சான்றிதழ் வழங்கி வருகிறது.

நவீன உபகரணங்களின் உதவியுடன் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளை பரீட்சித்து அவற்றில் இரசாயன கதிர்கள் கிடையாது என்று உறுதியானால் மாத்திரம் அவற்றை சந்தைக்கு விநியோகிக்க கம்பனிகளுக்கு அனுமதியளிப்பதாக அணுசக்தி அதிகார சபை கூறியது.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையோ சுகாதார அமைச்சோ கோரினால் இறக்குமதி செய்யப்படும் பால்மா மாதிரிகளை பரீட்சிப்பதற்கான ஆய்வு வசதிகள் வழங்க முடியும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# சிதம்பர விநாயகருக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தின் 7 ஆம் திருவிழாவான 22ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் மாலை சப்பறத் திருவிழாவும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (அ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# பிலிம்பிலிக்காய்/புளிமா/ புளிச்சக்காய்

**Botanical Name-**
**Averrhoa Bilimbi**
**Family-Oxalibaceae**
**Engl-Cucumber tree**
**Sinh- Bimbiri**

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்,**
**கைதடி.**

சிறிய மரம், 10 மீற்றர் முதல் 15 மீற்றர் உயரமாகவும் கிளைத்துத் தழைத்தும் வளரும், கூட்டிலை இறகு வடிவானது. சிற்றிலைகள் 5-17 இணைகள், அடிப்புறம் நுண்ரோமம் காணப்படும். 4-5 செ.மீ,2.5-3செ.மீ நீள்முட்டை வடிவானது. நுனிவளர் பூந்துணர் அடிமரத்திலும் கிளைகளின் தண் டிலும் நேரடியாக உண்டாகும். ஒழுங்கான மலர்



கள் ஐந்தடுக்கானது. சதைக்கனி, பழுக்காதது, மிகுந்த புளிப்பானது. சங்ககாலத்தில் கூட பிலிம்பிலிக்காயானது புளிமா என்ற பெயரில் உணவாக, ஊறுகாயாக, பானமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

விதையை நாற்றுவிட்டு நாட்டு இன விருத்தி செய்யலாம். வெப்ப நாடுகளில் இயற்கையாக வளரக்கூடியது.

இதன் பூக்களை பங்குனி தொடக்கம் வைகாசி வரையிலும் கார்த்திகை மாதங்களிலும் காணலாம்.

**100 கிராம் பழத்திலுள்ள சத்துக்கள்**

புரதம் 0.5 கிராம்
கொழுப்பு 0.3 கிராம்
நார்ப்பொருள் (செலுலோசு) 1.0 கிராம்
காபோவைதரேற்று 3.5 கிராம்
கல்சியம் 15.மி.கிராம்
பொஸ்பரஸ் 10 மி.கிராம்
இரும்பு 1.2 மி.கிராம்
தயமின் 0.09 மி.கிராம்
நியாசின் 32 மி.கிராம்
உயிர்ச்சத்து 'C' 44 மி.கிராம்
பொட்டாசியம் 130 மி.கிராம்
கரோட்டின் 18 மைக்ரோகிரோம்
சக்தி 19 கிலோகலோரிகள்

*மருத்துவ குணங்கள்*

இப்பழத்தின் சாறு தாகத்தை தணிக்கும், வயிற்றில் உண்டாகும் இரத்த ஒழுக்கை (அதாவது வயிற்றுப்புண் நிலைமையில்) சீராகும். முரசால் இரத்த வடிதலுக்கும் மூல நோய்க்கும் சிறந்த மூலிகையாகும். காய்ச்சல் நிலைமை உள்ளவர்கள் காய்ச்சலை தணிக்க இதனைப் பயன்படுத்தலாம்.

இதன் காய்களை பழப்புளிக்கு பதிலாக கறிவகைகளில் சேர்க்கலாம். இதனால் இலகுவில் உணவு சமிபாட்டடையக்கூடியதாக இருக்கும். வயிற்றுப் புண் அதி உயர் குருதியமுக்கத்தை பழப்புளிபோல் அதிகரிக்கச் செய்ய மாட்டாது.

இதன் பழுத்த பழங்களின் சாறு ஒரு பங்கிற்கு அதேயளவு நீர், சீனி 3 பங்கு சேர்த்து வாணலியில் இட்டு அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து மணம்வரும் தந்து பாகத்தில் இறக்கி ஒரு மேசைக்கரண்டி காலை ,மாலை கொடுக்க சுரமும் (காய்ச்சலும்) அதனால் ஏற்படும் தாகமும் தீரும்.

இதன் இலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி ஒருபங்கிற்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 30 மில்லி 3 வேளை அருந்த குதப்பை (Rectum) தாபிதம் தணியும்.

மூலநோய் உள்ளவர்கள் இதன் பழப் பானத்தையோ, அல்லது காயையோ சாதாரணமாக எடுத்துவர மூலநோய் குணமாகும்.


*பிலிம்பிலிக்காய் துவையல்*

பிலிம்பிலிக்காய் தேவையானஅளவு, செத்தல்- காய்களிற்கு ஏற்ப அல்லது 3, உப்பு தேவையான அளவு.

வாணலியில் ஒரு கரண்டி நல்லெண்ணெயில் மிளகாயை பொரித்து எடுத்து சேர்த்து பிலிம்பிலிக்காய்களையும் சேர்த்து அம்மியில் வைத்து அரைக்கவும். இந்த துவையலை மதியம் சோற்றுடன் பிசைந்து தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட்டு வர பித்தவாந்தி சமிபாடின்மை, முரசால் இரத்தம் வடிதல் ஆகியன நீங்கும்.

*பிலிம்பிலிக்காய் ஊறுகாய்*

பிலிம்பிலிக்காய்களை நான்கு கீற்றுத் துண்டுகளாக வெட்டி உப்பிட்டு ஒரு சாடியிலிட்டு, மூடிவைத்து 3 நாட்களின் பின் எடுத்துப் பிழிந்து, வெயிலில் காயவைத்து, மேற்படி பிழிந்த சாற்றைத் துணியில் வடித்து, அதற்கு மஞ்சள், வெந்தயம், தேவைப்படின் செத்தல் மிளகாய் என்பவற்றை எடுத்து வறுத்துக் கலந்து அத்துடன் காயவைத்த பிலிம்பிலிக்காய் வற்றலையும் இட்டு நன்கு கலந்து மூடி வைத்து 10-15 நாட்கள் நன்கு ஊறிய பின்னர் சோற்றுடன் சேர்த்து சாப்பிட்டுவர இலகுவில் ஜீரணமேற்பட உதவும். மலமும் நன்கு வெளியாகும். அதாவது சமிபாட்டை



சீராக்குவதுடன் இரத்தச்சோகை இரத்தச் சோகை, வாய்வு (Flatulence) போன்றன ஏற்படாமல் தடுக்கின்றது.

*பிலிம்பிலிக்காய் கஞ்சி*

அரிசிக் குறுணலிட்டுக் கஞ்சி காய்ச்சும் போது ஒரு சிறங்கை வெந்தயத்தை எடுத்து, சுத்தமான பருத்தித் துணியில் முடிந்து, பொட்டளியாகக் கட்டி அதனுள் இட்டு, பிலிம்பிலிக் காயையும்சிறுசிறு துண்டுகளாக வெட்டி தேவையானஅளவு உப்பு, கப்பிப்பால் அளவாக விட்டுக் காய்ச்சி பின்னர் அக்கஞ்சியை பருகிவரின் அருவருப்பு, ஓங்காளம் ஆகியன நீங்கும். நோய்கள் வந்து மாறியபின்னும் பசியின்மை காணப்படின் இக்க ஞ்சியை தயாரித்தும் குடிக்கலாம்.

இதே குணங்களையுடைய இன்னொரு சித்தினம் தமரத்தங்காய்

Botanical Name-Arerrhoa Carambolo
Family-Oxalidaceae
Engl-Chinese Gooseberry
Sinh-Kamaranga

இத் தமரத்தங்காயின் மருத்துவப் பண்புகளும் பிலிம்பிலிக்காயைப் போலவே இருக்கும். தமரத்தங்காயையும் பிலிம்பிலிக் காய் போன்று பயன்படுத்தலாம்.

பிலிம்பிலிக்காயைவிட இரும்புச்சத்து சற்றுக் கூடுதலாகக் காணப்படும். அதே போல் தமரத்தங்காயில் உயிர்ச்சத்து பி உம் காணப்படுகின்றது. பிலிம்பிலிக்காய் போல் காய்ச்சல், மூலரோகம், சமிபாடின்மை, வயிற்றுப் பொருமல், இரத்தச்சோகை போன்ற நிலைமைகளின் மேற்கூறிய முறைகளில் பிலிம்பிலிக்காய்களுக்கு பதில் தமரத்தங் காய்களையும் பயன்படுத்தலாம். இலை உடலுக்கு குளிர்ச்சியை கொடுப்பதோடு மலத்தையும் இழக்கி வெளியேற்றும் வெப்ப காலத்திற்கு உகந்த காய்களும் கனியுமாகும்.

தமரத்தம்பூக்களை சுத்தப்படுத்தி ஒரு பங்கிற்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக வற்றச் காய்ச்சி 30-60 மில்லி அளவு நாட்பட்ட தோல்வியாதிகளுக்கு குடிநீராக பயன் படுத்தலாம்.

பிலிம்பிலிக்காயைவிட தமரத்தம்பழங்கள்நல்ல சதைப்பற்றுள்ளதாக (Very pulpy) இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**ஒன்பதாமிடத்தில் வரும் குருவால் ஒளிமயமாகும் எதிர்காலம்** — **70/100**

### துவளாத உள்ளமும் துடிப்போடு செயலாற்றும் தன்மையும் கொண்ட துலாம் இராசி நேயர்களே!

உங்கள் இராசிக்கு இதுவரை எட்டாமிடத்தில் சஞ்சரித்து எண்ணற்ற கவலைகளைக் கொடுத்த குரு இப்பொழுது ஒன்பதாமிடத்தில் அடியெடுத்து வைத்து உன்னதமான வாழ்க்கைக்கு வித்திடப்போகிறார். அதுமட்டுமல்ல அங்கிருந்து கொண்டு தனது மூன்று விதமான பார்வை பலத்தால் முன்னேற்றங்களையும் அள்ளி வழங்கப்போகிறார்.

எப்போது வரும் குருப்பெயர்ச்சி? எல்லா காரியங்களும் தடையாக இருக்கின்றனவே? என்று நினைத்திருந்த உங்களுக்கு வைகாசி 14 ஆம் திகதி முதல் வசந்த காலம் வந்து விட்டது. இனி கசந்த காலங்கள் மாறும். காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

குருவின் பார்வை உங்கள் இராசியிலும் சகோதர சகாய ஸ்தானத்திலும் புத்திரஸ்தானத்திலும் பதிவாதிகிறது. எனவே, அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றது. அந்தந்த ஸ்தானங்களின் வாயிலாக நமக்கு ஏற்படவேண்டிய நற்பலன்கள் எல்லாம் தாமதப்படுத்தாமல் துரிதமாக நடைபெற வழிவகுக்கும் ஆற்றல் குருவின் பார்வைக்கு உண்டு.

குரு உங்கள் இராசியைப் பொறுத்தவரை 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதி. மேலும், இராசிநாதன் சுக்ரனுக்கு பகைக் கிரகமாக கருதப்படுகிறது. அப்படியிருக்கும் பொழுது எப்படி குருவின் பார்வை பலன் தரும் என்று நீங்கள் கருதலாம். இருந்தாலும் நவக்கிரகங்களில் சுப கிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் குரு பகவான்; ஆவார். எதிரியாக இருந்தாலும் சரணடைந்தால் சார்ந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவது உலக வழக்கம் அல்லவா? அதேபோலதான் கிரக நிலைகளும்.

சுமார் ஓர் ஆண்டு குரு மிதுனத்தில் வீற்றிருந்து உங்கள் எண்ணங்களை எல்லாம் ஈடேற்றி வைக்கப்போகிறது. பணப்பிரச்சி

ஆன்மிகத்தை ரசிப்பதிலும் நாட்டம் இருக்கும். எல்லோரையும் எளிதில் கவரும் ஆற்றல் இயற்கையிலேயே உங்களுக்கு உண்டு.

உங்கள் அணுகுமுறை மற்றவர்கள் மனதை புண்படுத்தாத வகையிலேயே அமையும். பஞ்சாயத்துக்களில் உங்கள் பேச்சைக் கேட்டு நடக்க பலரும் காத்திருப்பர். பிறரின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவீர்கள். அள்ளிக் கொடுப்பதில் வள்ளலான சுக்ரன் உங்களுக்கு செல்வத்தை கொடுக்கலாமே தவிர, சோர்ந்த வாழ்க்கைத்துணையால் நிம்மதியைக்கொடுக்குமா? என்பதை உங்கள் சுய ஜாதகத்தை வைத்தே நிர்ணயிக்க வேண்டும். திருமணப் பொருத்தங்கள் சிறப்பாக இருந்தால்தான் அருமையான வாழ்க்கைத்துணை உங்களுக்கு அமையும்.


உங்கள் இராசியை குருபார்த்தால் பலன் கொடுக்குமா? பலன் கொடுக்காதா? என்பது பலருக்கும் வரும் சந்தேகமாகும். காரணம், இராசிநாதன் சுக்ரனுக்கு பகைக்கிரகமாக குரு விளங்குவதுதான். இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு குருப்பெயர்ச்சி எப்படி இருக்கும் என்பதைப்பார்ப்போம்.

**ஒன்பதில் குருவும் வந்தால் ஒப்பற்ற வாழ்க்கை சேரும்! பொன், பொருள் அதிகரிக்கும்! பூமியால் இலாபம் கிட்டும்! நண்பர்கள் ஒத்து ழைப்பால் நலம்யாவும் வந்து கூடும்! இன்பத்தில் எல்லைகாண இறையருள் கைகொடுக்கும்!** என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு ஜீவன ஸ்தானத்திற்கும் அதிபதியாவதால் உத்தியோகம், தொழிலில் நீங்கள் எடுத்த முடிபு வெற்றி பெறும். விருப்ப ஓய்வில் வந்துகூட விரும்பிய தொழிலைத் தொடங்க ஒருசிலர் முன்வருவர். நண்பர்கள் ஒத்துழைப்போடு நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கப்போகிறது. எனவே, வாழ்க்கைப்பயணம் தொடங்கும் போது வழியெல்லாம் நல்ல தகவல் வந்து கொண்டே இருக்கும்.

குரு சகோதர வழி சச்சரவுகளை அகற்றி சந்தோஷங்களுக்கு வித்திடும் விதத்திலேயே அமைகிறது. ஏழரைச்சனியின் ஆதிக்கம் விலகிய பின்னால் மேலும் நன்மைகளைக்

## துலாம்



மாற்றம் போன்ற எந்த மாற்றத்தை எதிர்பார்த்தாலும் அந்த மாற்றத்தை நீங்கள் வரவழைத்துக்கொள்ள இயலும். கைநிறைய பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வீர்கள்.

பெயரும், புகழும், பெருமைகளும் வந்து சேரும். வாரந்தோறும் குருவழிபாட்டையும் வியாழன் தோறும் விரதத்தையும் மேற்கொண்டால் வளர்ச்சி மேலும் அதிகரிக்கும். நீண்ட நாளை நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் பணி புரிய முன்வருவீர்கள்.

குருவின் பார்வை சகோதர ஸ்தானத்தில் பதிவதால் உடன்பிறப்புகள் உற்சாகத்தோடு வந்திணைந்து உதவிக்கரம் நீட்டுவர். சகோதர பகை மாறி சந்தோஷம் கூடும். வழக்குகளில் வெற்றி கிட்டும்.

குருவின் பார்வை ஐந்தாம் இடத்தில் பதிவதால் புத்திர ஸ்தானம், பூர்வீக புண்ணி ஸ்தானம் வலுவடைகிறது. எனவே, பெற்றோர் வழிச் சொத்துக்களைப் பிரித்துக்கொடுப்பதில் இருந்த தடை அகலும். வீடு கட்டிக்குடியேற வேண்டுமென்ற ஆசை நிறைவேறும்.

உதிரி வருமானங்கள் பெருகும். பிள்ளைகளின் கல்வி முயற்சிக்கும் கடல் தாண்டும் முயற்சிக்கும் வழி வகுப்பீர்கள். லாபம் அதிகரிக்கும் இந்த நேரத்தில் புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுபவர்கள், யார் பெயரில் தொழில் செய்தால் நல்லது? என்பதை சுய ஜாதகரீதியாக ஆராய்ந்து தேர்ந்தெடுத்து அதிர்ஷ்ட எண்களின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் உங்கள் தொழில்நிலையத்தின் பெயரையும் அமைத்துக்கொண்டால் வளர்ச்சியின்மேல் வளர்ச்சி அதிகரிக்கும். வருமானமும் இரட்டிப்பாகும்.

பூர்வ புண்ணியத்தின் வாயிலாக உங்களுக்கு கிடைக்கக்கூடிய பலன்கள் அனைத்தும் இக்காலத்தில் தான் கிடைக்கும். பங்காளிப் பகை மாறும். பாகப்பிரிவினைகள் சுமூகமாகும். வங்காள விரிகுடா போல் உங்களுக்கு வரவேண்டிய பணம் வந்து கொண்டேயிருக்கும். வாய்த்தாக்கல்கள் ஓயும். வழக்குகளில் வெற்றி கிட்டும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதோடு மாபெரும் பொறுப்புகளும் பதவிகளும்கூட உங்களுக்கு வந்து சேரலாம்.

### அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!

மிதுனத்தில் சஞ்சரிக்கும் குரு 13.11.2013 முதல் 12.03.2014 வரை வக்ர கதியில் இயங்குகிறார். இந்த வக்ரம் உங்கள் இராசி அடிப்படையில் பார்க்கும் பொழுது 3,6 க்கு அதிபதியாக குரு விளங்குவதால் நன்மைகளையே உருவாக்கும். மறைவிடங்களுக்கு அதிபதி வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது நிறைவான பலன்களையே வழங்கும்.

எனவே, நீடித்த நோயிலிருந்தும் நிவாரணம் பெறுவீர்கள். நீண்ட நாளைய பாக்கிகள் வசூலாகும். பிறருக்குப்பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையை தானாகவே கொண்டு வந்து கொடுப்பர். உத்தியோக உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடியே வந்துசேரும். அதிகாரிகள் அனுகூலமாக



**28.05.2013 - 12.06.2014**

| | | | |
|---|---|---|---|
| | கேது | செவ்வாய் சூரியன் சுக்ரன் | புதன் வியாழன் |
| | குருப் பெயர்ச்சி 28.5.2013 | | |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | |

***சுபஸ்ரீவிஜயவருடம்வைகாசி மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (28.05.2013) இரவு 9.18 மணிக்கு மிருகசீரிட நட்சத்திரம் மூன்றாம் பாதத் தில் மிதுன இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கப் போகிறார்.***

**குருவின் வக்ரகாலம் 13.11.2013 முதல் 12.03.2014 வரை வியாழன் வக்ர கதியில் இருக்கிறார்.**

**01.06.2013 முதல் 01.07 2013 வரை குரு அஸ்தமனம் பெறுகிறார்.**

**பிறகு 13.06.2014இற்கு கடகத்தில் குரு உச்சம் பெற்று சஞ்சரித்து உன்னத பலன்களை உலகிற்கு வாரிவழங்கப் போகிறார்.**

### செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு!

வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்வதோடு திசைமாறிய தென்முகக்கடவுளையும் வழிபட்டு தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள்.

துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப்பெயர்ச்சி திருப்திகரமாக இருக்கும். கூட்டுக்குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிரிந்தவர்கள் வந்திணைவர். தாய்வழிஆதரவோடு தகுந்த முன்னேற்றத்தைக் காண்பீர்கள். ஜென்ம சனியின் ஆதிக்கம் இருப்பதால் வீண்விரோதங்கள் வீடுதேடி வரலாம். வேலை மாற்றச் சிந்தனைகள் மேலோங்கலாம். திசாபுத்தி பலம் பெற்றவர்கள் கவலைப்படத் தேவையில்லை. மற்றவர்கள் யோகபலம் பெற்ற நாளில்

## ஒன்பதாமிடத்தில் அடியெடுத்து வைக்கும் குரு உன்னத வாழ்க்கைக்கு வித்திடப்போகிறார்

னைகள் அகலும். பட்ட கடன் தீரும். பிணக்குகள் மாறி பிரியங்கள் கூடும்.

### நீதிக்கும் நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நீங்கள்!

நன்றி மறக்காத நல்ல குணத்தைப் பெற்றவர்கள் நீங்கள். ஒருமுறை ஒருவர் செய்த உதவியை எத்தனை காலங்கள் ஆனாலும், அதை மறக்கமாட்டீர்கள். நீதிக்கும் நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுப்பீர்கள். அழகை ரசிப்பதிலும் நாட்டம் இருக்கும்.

காணப்போகிறீர்கள்.

### வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!

குரு உங்கள் இராசிக்கு ஒன்பதாம் இடத்தில் சஞ்சரித்து அதன் புனிதப்பார்வையை உங்கள் ஜென்ம இராசியிலும் மூன்றாமிடத்திலும் ஐந்தாமிடத்திலும் (1,3,5) பதிக்கிறார். இதன்விளைவாக இதுவரை இருந்த தடைகள் படிப்படியாக அகலும். உடல்நலம் சீராகும். உள்ளத்தில் தெம்பு கூடும். கடன் சுமை குறைந்து கவலைகள் மாறும். இடமாற்றம், ஊர்

நடந்துகொள்வர். புதிய பொறுப்புகளும் பதவிகளும் ஒரு சிலருக்கு கிடைக்கும். சங்கிலித் தொடர்போல் வந்த கடன் சுமை இனி குறையும்.

மூன்றுக்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் வழக்குகளில் திசைதிருப்பம் ஏற்படும். வாய்த்தாக்கல்கள் ஓயும். கலக்கமுடன் இருப்பவர்களின் நிலை மாறும். கவனம் எல்லாம் முன்னேற்றத்தில் குறியாக இருக்கும். குடும்பப் பிரச்சினைகள் தீர முக்கிய புள்ளிகளை சந்தித்து முடிவெடுப்பீர்கள்.

ஜோதிடக் கலைமணி
சிவல்புரி சிங்காரம்


சர்ப்ப சாந்தியையும் சுயஜாதகத்தில் திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளையும் மேற்கொள்வது நல்லது. குருவின் வக்ர காலம் பொற்காலமாகவே அமையும். அக்காலத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசிய நாடுகளின் தேர்தல்களும் குடும்ப வாரிசுகளின் அரசியலும்

Ben Doherty (SOUTH ASIA CORRESPONDENT FOR FAIRFAX MEDIA) எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.



இவ்வாண்டு தென்னாசியாவைச் சேர்ந்த ஐந்து நாடுகள் தேர்தல்களை நடாத்துகின்றன. அடுத்த ஆண்டு இந்தியாவும் 2016 இல் இலங்கையும் தேர்தல்களை நடாத்தவுள்ளன. இத்தேர்தல்களில் இந்த நாடுகளின் பிரபலம் பெற்ற குடும்ப அரசில்வாதிகள் அதிகாரம் செலுத்துவார்கள்.

தேர்தல் என்பது மாற்றம் முன்னேற்றம் சீர்திருத்தம் போன்றன தொடர்பில் மேற்கொள்ளப்படுவதாக இதன் பரப்புரைகளின் போது வாக்குறுதி வழங்கப்படுகின்றன. ஆனால், தென்னாசியாவில் மேற்கொள்ளப்படும் பெரும்பாலான தேர்தல்களின் போது வழங்கப்படும் வாக்குறுதிகள் தேர்தல் வேட்பாளர்களின் பட்டியல்களில் காணப்படும் பழக்கமான, நன்கறிந்தவர்களின் பெயர்களால் நிரப்பப்படுகின்றன.

அதாவது, ஆசியாவின் அரசியலில் நீண்ட காலமாக மகன்கள், மகள்கள், துணைவியர் போன்ற குடும்ப உறுப்பினர்கள் மாறிமாறி ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்கின்றனர். எழுத்தறிவு வீதம் குறைந்த உலக நாடுகள் சிலவற்றில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் மக்களுக்கு பொருட்கள் மற்றும் நிதியுதவிகளை மேற்கொள்வதன் மூலம் தமது வாக்கு வங்கிகளை அதிகரிக்கின்றன. இந்த நாடுகளின் நாட்டின் தேர்தல் சார் கோட்பாடு என்ன என்பதைவிட தேர்தலில் போட்டியிடுபவர்களின் அரசியற் செல்வாக்கு அதிகமாக உள்ளபோது மக்கள் தமது வாக்கை வழங்குகின்றனர்.

பாகிஸ்தானின் அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக தற்போது ஆட்சியிலிருப்பவர் படுகொலை செய்யப்படாமல் அல்லது ஆட்சிக் கவிழ்ப்புச் செய்யப்படாமல் தேர்தல் ஒன்று நடாத்தப்படுகிறது. தற்போது பாகிஸ்தானை ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சியானது தனது வேட்பாளராக தற்போதைய அதிபர் அசிப் அலி சர்தாரியின் மகனான பிலாவல் புட்டோவை நிறுத்தியுள்ளது. இவர் இக்கட்சியின் நிறுவுனரும் பாகிஸ்தானின் முன்னாள் அதிபருமான சல்பிகார் அலி புட்டோவின் பேரனாவார். இவரது தாயார் பெனாசீர் புட்டோ 2007 இல் தற்கொலைக்குண்டுதாரி ஒருவரால் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் இரு தடவைகள் பாகிஸ்தானியப் பிரதமராக பதவியேற்றிருந்தார்.

25 வயதை அடைகின்ற இளைஞனான பிலாவர் புட்டோ கடந்த ஆண்டு அவரது தாயாரின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வின் போதுதான் அரசியலுக்குள் நுழையவுள்ளதாக அறிவித்தார். தனது கட்சிக்கு எதிராகச் செயற்படுபவர்களைக் கண்டறிந்து அவர்களை நீதிமன்றில் நிறுத்துவதே தனது நோக்கம் எனவும் இந்த எதிரிகள் பாகிஸ்தானின் ஜனநாயகத்திற்கு இடையூறாக காணப்படுவதாகவும் இவர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தலை விளைவிக்கின்ற வன்முறைகளில் ஈடுபடுவதற்கான ஆபத்து உள்ளதாகவும் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

பாகிஸ்தானியப் பிரதமராகப் பதவி வகித்து பின்னர் படுகொலை செய்யப்பட்ட தனது தாயாரான பெனாசீர் புட்டோ மற்றும் பேரனாரான சல்பிகா அலி புட்டோ மற்றும் நாட்டின் அதிபரும் தனது தந்தையாருமான அசிப் அலி சர்தாரி ஆகியவர்களின் பெயர்களைப் பயன்படுத்தி பிலாவல் புட்டோ தற்போது பாகிஸ்தானிய அரசியலில் நுழைந்து கொண்டதுடன் தேர்தலிலும் போட்டியிட்டுள்ளார். அதாவது, இவரது குடும்பத்தவர்கள் பாகிஸ்தானுக்காக செய்த உயிர் அர்ப்பணிப்பானது இவர் தேர்தலில் முதன்மை பெறுவதற்கு துணைபோயுள்ளது.

ஒவ்வொரு சவால்களும் இரத்தத்தால் சூழப்பட்டுள்ளன. ஆனால், நீங்கள் இழப்பைச் சந்திப்பீர்கள். எத்தனை புட்டோக்களையும் நீங்கள் கொன்றாலும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பல புட்டோக்கள் எழுவார்கள் என பிலாவல் புட்டோ குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களாக பிலாவல் புட்டோ பாகிஸ்தானியர்கள் மத்தியில் அதிகம் பேசப்படுகின்ற போதிலும் பெரும்பாலான பாகிஸ்தானியர்களுக்கு இவர் புதிரான மனிதராகவே காணப்படுகிறார். இவர் பாதுகாப்புக் காரணங்களுக்காக மக்கள் மத்தியில் வெளிவரும் மிக அரிதாகும். இவர் தனது வாழ்நாளின் பெரும் பகுதியை பாகிஸ்தானுக்கு வெளியே வேறு நாடுகளில் கழித்துள்ளார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்ற பிலாவால் புட்டோ ஆங்கில மொழியையே அதிகம் பேசுவார். இவர் உருதுமொழியை அவ்வளவும் சரளமாகப் பேசமாட்டார்.

இவர் ஊடகங்களில் ஒருபோதும் நேர்காணல்களை வழங்கவில்லை. லாகூரின் புறநகர்ப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புட்டோவின் தனிப்பட்ட வாசஸ்தலத்தினை 90 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்டது என்கின்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் பிலாவால் புட்டோ ஒருபோதும் பதிலளிக்கவில்லை. இவர் பாகிஸ்தானிய ஏழை மக்களின் மனங்களைக் கவரக்கூடிய எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இவரை நாடாளுமன்றுக்கு கொண்டுவருவதாக அடுத்த ஆண்டு அதாவது இவரது 25 ஆவது பிறந்த நாள் நிறைவடைந்த பின்னர் தேர்தல் ஒன்றை மேற்கொள்வது தொடர்பாக பேசப்படுகிறது. பாகிஸ்தானிய மக்கள் கட்சியானது புட்டோவின் பெயரால் பலம்பெற்றுள்ளது என இக்கட்சியின் பேச்சாளர் பர்கற்றுல்லா பாபா தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிய மக்கள் கட்சியின் அதிகாரத்தை பிலாவல் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே இக்கட்சியின் முழுமையான இலக்காகும். ஆனால், இவர் இக்கட்சியை முழு அளவில் தலைமை தாங்குவதற்கான ஆளுமையை எடுத்துக்கொள்வதற்கு சில காலங்கள் தேவைப்படும். இவர் பிரதமராகலாம் ஆனால், இதற்கு நீண்ட காலம் தேவை என அரசியல் ஆய்வாளரான கலாநிதி ஹசன் அஸ்காரி ரிஸ்வி தெரிவித்துள்ளார்.

அதிகார ஆட்சியைக் குடும்பத்து உறுப்பினர்கள் தொடரந்தும் தக்க வைத்துக்கொள்வதென்பது தென்னாசிய அரசியலுக்கு மட்டும் உரித்தான ஒன்றல்ல. அமெரிக்க அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கினால், அங்கே கென்னடிக்கள், புஷ்கள், கிளின்ரன்கள் ஆட்சி அதிகாரத்தை மாறிமாறி கைப்பற்றியுள்ளனர். இதேபோன்று ஐரோப்பிய நாடுகளில் லீ பென்ஸ், டீ கௌலஸ், மிலிபாண்ட்ஸ் என குடும்ப உறுப்பினர்கள் ஆட்சியில் இருந்துள்ளனர். அவுஸ்திரேலியாவிலும் கூட டௌனர்கள், கெய்ன்கள், பீஸலெய்கள், கிறீன்கள் என ஒரே குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் ஆட்சியிலிருந்துள்ளனர்.

ஆனால், ஆட்சி அதிகாரமானது பரம்பரை பரம்பரையாக கைப்பற்றப்படுவதானது தென்னாசிய நாடுகள் பலவற்றில் மிக அதிகம் காணப்படுவதற்கான காரணங்கள் பலவுள்ளன.

அதாவது, அரசியல் படுகொலைகள் தென்னாசியாவில் அதிகம் காணப்படுவதால் இவ்வாறான பரம்பரை அரசியல் ஆட்சி அதிகரிக்கிறது. இதேபோன்று இந்த நாடுகளின் எழுத்தறிவு வீதம் மிகவும் குறைவாகக் காணப்படுவதால் மில்லியன் கணக்கான வாக்குகள் பிரபலமான அரசியல் தலைவர்களின் பெயரால் மோசடி செய்யப்படுகின்றன் தென்னாசியநாடுகள் பலவற்றில் தேர்தல்கள் நடைபெறும் போது உணவு அல்லது எரிபொருள் போன்ற அற்பப் பொருட்களை மக்களுக்கு வழங்கி அதன் மூலம் வாக்கு வேட்டைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாகிஸ்தானிய கிராமங்களில் அந்த முழுக் கிராமங்களும் முழுக் குடும்ப உறுப்பினர்களும் தமது வாக்குகளை குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு அல்லது அரசியல் குடும்பத்திற்கு மட்டுமே வழங்குவதைக் காணலாம் என உருதுமொழி மூல பத்திரிகையின் ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் எல்லோரும் ஒரே விதமாகவே வாக்களிக்கிறார்கள். ஏனெனில் இவர்களது கிராமங்களுக்கு தேர்தல் பரப்புரையின் போது வரும் அரசியல்வாதிக்காக பாகிஸ்தானிய கிராம மக்கள் வாக்களிக்கின்ற நிலை காணப்படுகிறது. இந்த நிலைமை மாற்றுவது மிகவும் கடினமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென்னாசிய நாடுகள் சிலவற்றில் அதிகாரம் மிக்க அரசியற் பின்னணியானது, தேர்தலில் அதிக வாக்குகளைப் பெறுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது மிகச் சாதாரணமான காரணியாகும். ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையிலான இடைவெளி மிக அதிகமாக உள்ள சமூகங்களில் அரசியலில் பங்குபெறும் வழியானது பலருக்கு மூடப்பட்டுள்ளது. சிலருக்கே இந்த வழி திறந்துள்ளது.

அரசியல் உறுதியின்மை, ஊழல்கள், அடுத்த கட்டத் தலைமுறைக்குச் சொந்தமான இடத்தை மட்டும் அரசாங்கம் பாதுகாத்தல், அரசியல் பாரபட்சம் போன்றன் நாட்டின் அரசியல் வளர்ச்சிக்குத் தடையாகக் காணப்படுகின்றன.

தேர்தல்கள் ஜனநாயக வழியில் மேற்கொள்ளப்பட்டு மக்கள் தமக்கான ஆட்சியாளர்களைத் தாமே தெரிவு செய்வதற்கான ஜனநாயக உரிமையைக் கொண்டுள்ளனர். இது நேர்மறையான சிந்தனையாக இருக்க முடியும். ஆனால், இவ்வாறான ஜனநாயக வழிமுறை பாதிக்கப்பட்டு, மக்கள் முழுமையாக இதில் பங்குபெற அனுமதிக்காவிட்டால் இது எதிர்விளைவைக்கொடுக்கும்.

இவ்வாண்டு தென்னாசியாவைச் சேர்ந்த ஐந்துநாடுகள் தேர்தல்களை நடாத்துகின்றன. அடுத்த ஆண்டு இந்தியாவும் 2016 இல் இலங்கையும் தேர்தல்களை நடாத்தவுள்ளன. இத்தேர்தல்களில் இந்த நாடுகளின் பிரபலம் பெற்ற குடும்ப அரசியல்வாதிகள் அதிகாரம் செலுத்துவார்கள்.

பங்களாதேசில் இவ்வாண்டின் இறுதியில் நடைபெறவுள்ள தேர்தலில் பங்குபெறும் பிரதான அரசியற் கட்சியை பெண்கள் தலைமை தாங்குகின்றனர். அதாவது, அவாமி லீக் கட்சியை ஷேக் கசீனாவும் பங்களாதேஷ்தேசியக் கட்சியை காலிடா சியாவும் தலைமை தாங்குகிறார்கள். இவர்களில் ஒருவர் பங்களாதேஷ் அரசியலில் பிரபலம் பெற்ற முன்னாள் தலைவர் ஒருவரின் மகளாவார். மற்றையவர் முன்னாள் தலைவர் ஒருவரின் மனைவியாவார். இவ்விரு பெண்களும் முன்னர் நாட்டின் பிரதமர்களாக இருந்தவர்களாவர்.

இதேபோன்று இலங்கையில் ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் முதன்மை இடத்தில் உள்ளது. அரசியல் யாப்பு அனுமதிக்காது விட்டாலும்கூட 2016 இல் நடைபெறவுள்ள தேர்தலில் தற்போதை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் போட்டியிடுவார். ஏற்கனவே இவரும் அரசியல் அதிகாரத்திலுள்ள இவரது மூன்று சகோதரர்களும் இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தின் 70 சதவீதத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுள்ளனர். அத்துடன் மஹிந்தவின் மகனான நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் தற்போது அரசியலில்வளர்ந்து வருகிறார்.

இவ்வாண்டு நேபாளத்தில் தேர்தல் நடர்த்தப்படவுள்ளது. பூட்டானிலும் இரண்டாவது தடவையாக தேர்தல் நடாத்தப்படவுள்ளது. இவ்விரு நாடுகளிலும் குடும்ப வாரிசுகள் தொடர்ந்தும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி வருகின்றனர்.

மாலைதீவில் வரும் செப்ரெம்பரில் தேர்தல் நடைபெறவுள்ளது. ஆட்சிக்கவிழ்ப்பு மூலம் அதிபரான மொகமட் வகீட் தனது அமைச்சரவைக்கு மாலைதீவின் முன்னாள் சர்வதாதிகாரியான மயூமுன் கஜூமின் மகளை நியமித்துள்ளார்.

மியன்மாரில், ஜெனரல் ஆங் சானின் மகளான ஆங் சான் சூகி அரசியல் நடவடிக்கையில் பங்கு பற்றுகிறார். இவர் பல ஆண்டு காலம் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இதன்பின்னர் தற்போது மியான்மாரின் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கிறார்.

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் குடும்ப ஆட்சி நிலவுகிறது. அடுத்த ஆண்டில் இங்கு நடைபெறவுள்ள தேர்தலில் ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ராகுல் காந்தி போட்டியிட்டு பிரதமராக வரலாம் என எதிர்வு கூறப்படுகிறது. இவர் பதவியில் அமர்ந்தால் இவரது பரம்பரையின் வாரிசாக பதவியைத் தக்கவைத்துக்கொள்கின்ற நான்காவது நபராகக் காணப்படுவார்.

ராகுல் காந்தி ஒரு பத்தாண்டாக நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தார். கடந்த மாதம் இவர் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். பிரதமராக வருவது எனது முதன்மையான நோக்கல்ல என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கபடமற்ற பேச்சானது இந்தியாவின் மிகச் சிறந்த நலனாக இருக்கலாம். ஆனால், உண்மையான ஜனநாயகம் என்பது குடும்ப வாரிசுகளின் ஆட்சி அதிகாரத்திற்கு அப்பால் சுதந்திரமாக செயற்பட வேண்டும். நீண்டகால அடிப்படை நோக்கில் ஒரு நாட்டின் ஆட்சியானது பலமானதாக காணப்பட வேண்டிய தேவையுள்ளது. அதாவது ஒரு குடும்பத்தை விட நாட்டின் ஆட்சி பலமானதாக அமைய வேண்டும் என அரசியல் ஆய்வாளரான கலாநிதி றிஸ்வி வலியுறுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி இணைப்பு எப்போது கிடைக்கும்?

## வவுனியா தெற்கு மக்கள் காத்திருப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபைக்குட்பட்ட கிராம மக்கள் தொலைபேசி இணைப்புகளுக்கு விண்ணப்பித்து பல மாதங்களாகியும் இதுவரை இணைப்புக்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்திற்கு விண்ணப்பங்களை முறைப்படி சமர்ப்பித்துள்ளோம். எனினும், பல மாதங்களாகியும் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் ரெலிக்கொம் நிறுவனத்துடன் தொடர்புகொண்டபோது, தொலைபேசி கம்பங்களை நாட்டுவில் தாம் சிரமங்களை எதிர் கொள்வதாக அவர்கள் கூறினர்.

இதுபற்றி ரெலிக்கொம் நிறுவனத்தின் வவுனியா அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது,

வவுனியாவில் கிராமமட்டத்திலிருந்து புதிய தொலைபேசி இணைப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனை நாம் பரிசீலித்து இணைப்பை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு கம்பங்களை நடும் வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பித்தபோது வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினரால் தடைவிதிக்கப்பட்டது.

இதன்காரணமாக நாம் இணைப்புக்களை மக்களுக்கு வழங்க முடியாது முடக்கப்பட்டுள்ளோம். பிரதேச சபையினர் ஒவ்வொரு தொலைபேசிக் கம்பத்துக்கும் தமக்கென வருடாந்தம் பணம் செலுத்தவேண்டுமென தெரிவிப்பதுடன், முற்பணமும் செலுத்துமாறு ரெலிக்கொமை வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்விடயம் பற்றி எமது தலைமைக் காரியாலயம் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடிய போதிலும் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இதனால், நாம் எமது சேவையை மக்களுக்கு வழங்கமுடியாதுள்ளது எனத் தெரிவித்தனர்.

பிரதேச சபையின் தலைவர் க.சிவலிங்கத்திடம் இது பற்றிக்கேட்டபோது, தொலைபேசி இணைப்புக்கள் இலாப நோக்கம் கருதி வழங்கப்படுவதால் நாம் எமது சபைக்கு வரி செலுத்துமாறு கோரியுள்ளோம்.

இதுதொடர்பில் எமது சபை ஏகமனதாக முடிவெடுத்து வர்த்தமானியிலும் பிரசுரித்துள்ளது.

இந்த வகையில், ரெலிக்கொம் நிறுவனம் எமது சபைக்குட்பட்ட பகுதிகளில் நடும் ஒவ்வொரு கம்பத்திற்கும் 150ரூபா முதற்தடவை செலுத்த வேண்டும். பின்னர் வருடாந்தம் 120 ரூபா செலுத்தவேண்டும் என தெரிவித்தார். (அ-266)

# நிறுத்தல் அளவை கருவிகள் முத்திரையிடப்படவில்லை

## பாவனையாளர்கள் விசனம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள விற்பனை நிலையங்களில் பயன்படுத்தப்படும் அளவுக்கருவிகள் உரியமுறையில் முத்திரை இடப்படாதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வடமராட்சி கிழக்குப் பகுதியின் விற்பனை நிலையங்களில் பயன்படுத்தப்படும் அளவுக் கருவிகளுக்கு முத்திரை இடப்படவில்லை எனவும், சில விற்பனை நிலையங்களில் அளவுப் படிகளுக்குப் பதிலாக வேறு பொருட்களை விற்பனையாளர் பயன்படுத்துகின்றனர் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனைவிட திரவப் பொருள் அளக்கும் அளவு கான்களுக்கும் முத்திரை இடப்படவில்லை. கான்களுக்குப் பதிலாக போத்தல்கள் பயன்படுகின்றன எனவும், சிலர் அளவுக்கு கான்களைத் நெளித்து அல்லது கான்களில் துவராமிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றைவிட இப்பகுதியில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையங்களில் ஏனைய உணவு விற்பனைப் பொருட்களுடன் எரிபொருள் எண்ணெயையும் சேர்த்து விற்பனை செய்வதால் அது உணவுப் பொருட்களுக்கு குந்தகம் எனவும் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, இத்துறைசார்ந்த அதிகாரிகள் இவற்றைக் கருத்தில் எடுத்து இவற்றுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-64)

# வடமராட்சி கடலில் அதிகளவு சூடைமீன்கள் பிடிபடுகின்றன

வடமராட்சி கிழக்குப் பிரதேச கடற்பரப்பில் கடந்த சில நாட்களாக பெருந்தொகையான சூடை மீன்கள் பிடிபடுவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சில நாட்களுக்கு முன்பு இந்த மீனின் விலை ஒரு கிலோ 80 ரூபா தொடக்கம் 100 ரூபா வரை விற்கப்பட்டதாகவும் தற்போது இந்த விலை குறைவடைந்து ஒரு கிலோ 20 ரூபா தொடக்கம் 40 ரூபா வரை விற்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சில சந்தர்ப்பங்களில் இம் மீன்களை முற்றாக சந்தைப்படுத்த முடியாதுள்ளதாகவும் அண்மை நாட்களாக இருந்து வரும் கால நிலை மாற்றம், பெய்து வரும் மழை காரணமாகவும் இம் மீன்களைப் பதனிட முடியாதுள்ளதாகவும் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (அ-64)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2013.05 15

- ❖ *1525* - ஜேர்மனியின் பிராங்கென்ஹவுசன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரை அடுத்து விவசாயிகளின் போர் முடிவுக்கு வந்தது.
- ❖ *1618* - ஜொஹான்னெஸ் கெப்லர் முன்னர் மார்ச் 8 இல் நிராகரிக்கப்பட்ட தனது மூன்றாவது கோள் இயக்க விதியை மீண்டும் நிறுவினார்.
- ❖ *1718* -உலகின் முதலாவது இயந்திரத் துப்பாக்கிக்கான காப்புரிமத்தை லண்டனைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜேம்ஸ் பக்கிள் பெற்றார்.
- ❖ *1756* -இங்கிலாந்து பிரான்சின் மீது போரை அறிவித்ததில் ஏழாண்டுப் போர் ஆரம்பமாகியது.
- ❖ *1792* - பிரான்ஸ் சார்டீனியப் பேரரசு மீது போரை அறிவித்தது.
- ❖ *1796*-நெப்போலியனின் படைகள் இத்தாலியின் மிலான் நகரைக் கைப்பற்றின.
- ❖ *1851* - நான்காவது ராமா தாய்லாந்தின் மன்னராக முடி சூடினார்.
- ❖ *1860* - கரிபால்டியின் படைகள் சிசிலியின் நேப்பில்ஸ் நகரைக் கைப்பற்றின.
- ❖ *1897*-கிரேக்க துருக்கியப் போரில் கிரேக்கப் படையினர் பெரும் சேதத்துடன் பின்வாங்கினர்.
- ❖ *1915* - இந்திய பாதுகாப்புச் சட்டத்தை முன்னிறுத்தி இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் ஷவ்கத் அலியும் முகம்மது அலியும் கைது செய்யப்பட்டு சிந்துவாரா சிறையில் அடைக்கப்பட்டனர்.
- ❖ *1918* -பின்லாந்து உள்நாட்டுப் போர் முடிவுற்றது.
- ❖ *1919* - துருக்கியின் இஸ்மீர் நகரை கிரேக்கப் படைகள் முற்றுகையிட்டன. 350 துருக்கியர்கள் கிரேக்க இராணுவத்தினரால் கொல்லப்பட்டும் காயமுமடைந்தனர்.
- ❖ *1929* - ஒகைய்யோ மாநிலத்தில் கிளீவ்லன்ட் நகரில் மருத்துவமனை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 123 பேர் உயிரிழந்தனர்.
- ❖ *1932* -ஜப்பானியப் படையினர் ஷங்காயை விட்டுப் புறப்பட்டனர்.
- ❖ *1932* -ஜப்பானின் பிரதமர் இனூக்காய்த்சுயோஷி அரசு கவிழ்ப்பு முயற்சியில் கொல்லப்பட்டார்.
- ❖ *1935* -மொஸ்கோவில் சுரங்க தொடரூந்து சேவை ஆரம்பமானது.
- ❖ *1940* - இரண்டாம் உலகப் போர்: பெரும் போருக்குப் பின்னர் டச்சுப் படைகள் நாசி ஜேர்மன் படைகளிடம் சரணடைந்தன.
- ❖ *1940* - மக்டொனால்ட்ஸ் தனது முதலாவது உணவகத்தை கலிபோர்னியாவில் ஆரம்பித்தது.
- ❖ *1948* - இஸ்ரேல் மீது அரபு நாடுகளான எகிப்து, ஜோர்தான், லெபனான், சிரியா, ஈராக் மற்றும் சவுதி அரேபியா ஆகியன இணைந்து தாக்குதலை ஆரம்பித்தன.
- ❖ *1955*-உலகின் ஐந்தாவது உயரமான மக்காலு மலையின் உச்சியை பிரெஞ்சு மலையேறிகள் முதன் முதலாக எட்டினர்.
- ❖ *1957* -பசுபிக் பெருங்கடல் பகுதியில் மால்டன் தீவில் பிரித்தானியா தனது முதலாவது ஐதரசன் குண்டை சோதித்தது. ஆனாலும் இது தோல்வியடைந்தது.
- ❖ *1958*-சோவியத்தின் ஸ்புட்னிக் 3 விண்கலம் ஏவப்பட்டது.
- ❖ *1960* - சோவியத்தின் ஸ்புட்னிக் 4 விண்கலம் ஏவப்பட்டது.
- ❖ *1963* - நாசாவின் மேர்க்குரி-அட்லஸ் 9 விண்கலம் ஏவப்பட்டது. கோர்டன் கூப்பர் இவ்விண்கலத்தில் பயணித்து விண்வெளியில் ஒரு நாளுக்கு மேல் தங்கிய முதலாவது அமெரிக்கர் ஆனார்.
- ❖ *1972-1945* முதல் ஐக்கிய அமெரிக்காவின் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த ஒக்கினாவா தீவு மீண்டும் ஜப்பானிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ❖ *1978*-டோக்கியோ பங்குச் சந்தை அமைக்கப்பட்டது.
- ❖ *1985* - குமுதினி படகுப் படுகொலைகள், 1985: நெடுந்தீவு மாவலித்துறையில் இருந்து 64 பயணிகளுடன் புறப்பட்ட குமுதினி என்ற படகு இலங்கைக் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள், பெண்கள் உட்பட 36 பேர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.
- ❖ *1988* - எட்டு ஆண்டுகள் போருக்குப் பின்னர் சோவியத் இராணுவத்தினர் ஆப்கானிஸ்தானில் இருந்து பின்வாங்கத் ஆரம்பித்தனர்.
- ❖ *1991* -ஈடித் கிரெசன் பிரான்சின் முதற் பெண் பிரதமரானார்.
- ❖ *2005* -திருகோணமலை நகர் மத்தியில் இரவோடிரவாக புத்தர் சிலை எழுப்பப்பட்டதில் அங்கு கலவரம் வெடித்தது.
- ❖ *2006* -வவுனியாவில் நோர்வே அகதிகள் சபைப் பணியாளர் ஜெயரூபன் ஞானபிரகாசம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

*பிறப்புக்கள்*

- ❖ *1859-பியேர் கியூரி, பிரெஞ்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1906)*
- ❖ *1912* - இராமசுவாமி ஐயர் (புளிமூட்டை), நகைச்சுவை நடிகர்

*இறப்பு*

- ❖ *1978*-றொபேர்ட் மென்சீஸ், அவுஸ்திரேலியாவின் 12 ஆவது பிரதமர் (பி. 1894)

### பியேர் கியூரி

பியேர் கியூரி பிரெஞ்சு இயற்பியலாளர். அழுத்த மின் விளைவு, காந்தவியல், படிகவியல் மற்றும் கதிரியக்கக் கண்டுபிடிப்புகளின் முன்னோடிகளில் ஒருவராவார். 1903 ஆம் ஆண்டில் ஹென்றி பெக்கெரல், மேரி கியூரி ஆகியோருடன் சேர்ந்து இயற்பியலுக்கான நோபல் பரிசினை பகிர்ந்து கொண்ட அறிவியலாளர். 1859 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் நாள் பியேர் கியூரி பாரிசில் பிறந் தார். 14 ஆம் வயதிலேயே இவருடைய கணித ஆர்வம் வெளிப்பட்டது. 16 வயதில் பல்கலைக்கழகப் படிப்பிற்காக பல்கலைக்கழகத்துள் நுழைந்தார். 18 வயதில் அமெரிக்காவில் முதுகலைக்கு நிகரான பட்டத்தைப் பெற்றார்.

ஜேக்குவிஸ் என்ற இவரது அண்ணனுடன் இணைந்து முக்கியமான முதல் அறிவியல் ஆய்வில் இவர் ஈடுபட்டார். அப்போது பியேரின் வயது 21. அண்ணனின் வயது 24. இருவரும் சேர்ந்து அழுத்த மின் விளைவினை (Piezo Electric Effecr) கண்டுபிடித்தனர். அதாவது சில படிகங்களில் அழுத்தத்தைச் செலுத்தும் போது அவை மின்னழுத்தத்தை வெளிப்படுத்தின. மாறாக அவற்றை மின் புலத்ஹ்டில் வைத்தால் அப்படிகங்கள் அழுத்தத்திற்கு உள்ளாகின்றன. இந்த இரு செயல்களுக்கும் உள்ள ஒரே தன்மையுள்ள அடிப்படைப் பண்புகள் இயற்பியல் விதிகளை மேம்படுத்த உதவின. 1906 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் நாள் பாரிசில், புயலுடன் கூடிய கடுமையான மழை பெய்து கொண்டிருந்த போது ரியூடௌபைன் என்ற இடத்தில் சாலையின் குறுக்கே இவர் கடக்கும் போது பெரிய சரக்கு வண்டி ஒன்று இவரை மோதிக் கீழே தள்ளியதால் இவர் மரணம் அடைந்தார். கியூரி தம்பதியரைப் பெருமைப்படுத்தும் விதமாக பல அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலைக்கு நீதிகோரி லண்டனில் மாபெரும் பேரணி

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதி கோரி லண்டனில் மாபெரும் பேரணி யொன்று நடத்தப்படவுள்ளது. முள்ளிவாய்க் கால் படுகொலையில் கொல்லப்பட்ட உறவு களை நினைவுகூரும் முகமாகவும் இழைக்கப் பட்ட அநீதிகளுக்கு நீதி கோரும் முகமாகவும் குறித்த பேரணி நடைபெறவுள்ளது.

பிரித்தானிய தமிழர் பேரவையினால் ஏற் பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பேரணி எதிர் வரும் 18 ஆம்திகதி சனிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு North Carriage Drive, Hyde Park இல் இருந்து ஆரம்பிக்கவுள்ளது. அதனைத் தொடர்ந்து தாயகம் மற்றும் தமிழ கத்திலிருந்து வருகை தரும் தமிழின உணர் வாளர்களின் உரையும் இடம்பெறும்.

இதேவேளை பிரித்தானிய தமிழர் பேரவை யால் பிரித்தானிய பிரதமருக்கு மகஜர் ஒன் றும் கையளிக்கப்படவுள்ளது. அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

நாங்கள் இன்று வரலாற்றின் முக்கிய தருணத்தில் நிற்கின்றோம். ஒருபுறம் பால கன் பாலச்சந்திரனின் புகைப்படம் வெளி வந்து உலகின் மனச்சாட்சியை உலுப்புகின் றது. மறுபுறம் அப்பாலகன் அடங்கலாக பல்லாயிரம் மக்களைக் கொன்று குவித்த இலங்கை அரசு நடத்தும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு எமது பிரித்தானிய பிரதமர் செல்ல தயாராகின்றார்.

ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் நாட் டின் பிரதமர் ஒரு இனப்படுகொலை அரசின் அழைப்பை ஏற்று அங்கு செல்வது ஒரு வர லாற்றுத் துயரம். அதை நாம் ஜனநாயக வழி யில் எதிர்க்க வேண்டும். எதிர்வரும் நாட்களில் நாம் செய்யவிருக்கும் ஒவ்வொரு போராட் டமும் பிரதமரின் அலுவலகத்துக்கும் பக்கிங் ஹாம் அரண்மனைக்கும் ஒரு செய்தியை சொல்ல வேண்டும். சாட்சியங்கள் அற்ற நிலை யில் நடத்தப்பட்ட போரின் சாட்சியங்கள் வெளி வரத் தொடங்கி பல ஆண்டுகள் கடந்து விட்டன.

நாங்கள் கேட்பது எல்லாம் அப்போரின் போது நடைபெற்ற அனைத்து மனிதவுரிமை மீறல்களும் ஓர் சர்வதேச சுயாதீன விசார ணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதே. அவ்வாறான விசாரணை ஒன்று ஆரம்பித்தால் தான் ஈழத்தில் நடைபெற்றது ஓர் இனப் படுகொலையே என நிரூபணமாகும். மக்கள் சக்தியே மகத்தான சக்தியாகும். எமது உணர்ச் சியும் எழுச்சியும் ஒரு சக்தியாக வெளிப்படும் போது அது பலனை தந்ததை நாம் வரலாற் றில் கண்டுள்ளோம். லண்டன் பேரணிகள் தமிழர் போராட்ட வரலாற்றில் மைல் கற்கள். அவ்வாறான ஒரு மைல் கல்லை நிறுவ பிரித் தானிய தமிழர் பேரவை மீண்டும் எம்மை அழைக்கின்றது.

தமிழர் தொடர்பான பிரித்தானியாவின் கொள்கைகளில் ஒரு மாற்றத்தை 2009 ஆண்டு பேரணிகள் ஏற்படுத்தின. ஈழப் போரை ஒரு பயங்கரவாத போராக தடைசெய்த பிரித்தா னிய அரசு, பின்னர் தமிழர்களின் நியாயங் களை ஓரளவு உணர்வதற்கு தலைப்பட்டதே 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற பேரணிக ளின் பின்னர்தான். வீதியில் மக்கள் திரண்ட அந்தப் பொழுதுகளில்தான் பிரித்தானிய ஊடகங்களின் கவனம் தமிழர் பிரச்சினை கள்பால் ஈர்க்கப்பட்டது என அதில் தெரிவிக்க ப்பட்டுள்ளது. (அ-2)

## திருக்கேதீஸ்வரத்தில் மஹோற்சவம்

(மன்னார்)

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவத்தில் 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை திருக்கல்யாணமும் இரவு தண்டிகைத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை இரவு பக் தோற்சவமும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக் கிழமை தீர்த்தமும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர் வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (அ)

## நூலக வாரம்

(யாழ்ப்பாணம்)

மே 12 முதல் 18 வரை அனுஷ்டிக்கப் படுகின்ற நூலக வாரத்தினை முன்னிட்டு சுன் னாகம் பொதுநூலகத்தினரால் சிறுவர் கதை வேளையும் கண்காட்சியும் சுன்னாகம் கிழக்கு சிவன் முன்பள்ளியில் இன்று காலை 9.30 இற்கு வலி.தெற்கு பிரதேச சபையின் சுன் னாகம் உறுப்பினர் க.கருணநாயகம் தலை மையில் நடைபெறவுள்ளது. (அ)

# மத்தள விமானநிலையத்தால் இலங்கைக்கு பயனில்லை

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு; குழு அமைத்தது அரசு

(கொழும்பு)

மத்தள விமான நிலையத்தால் இலங்கை க்கு எவ்வித பயனும் இல்லை எனவும் அது வீண் பணவிரயம் என்றும் உகந்த இடத்தில் அது அமைக்கப்படவில்லை என்றும் எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன.

அத்துடன் விமான ஓடு பாதையில் பற வைகள் தொல்லை காணப்படுவதால் விபத்து அபாயம் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை புதிதாக திறக்கப்பட்ட மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலை யத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படும் போது முன்னுரிமை கொடுக்க வேண்டிய நடவடிக் கைகள் குறித்து கவனம் செலுத்தவென இக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன தெரிவித்தார்.

இந்நிலையில் எயார் அரேபியா என்ற விமான நிறுவனம் அண்மையில் மத்தள விமான சேவை யில் இருந்து விலகிக் கொள் வதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வெடி விபத்தில் காயமடைந்த நபர் கண்டி வைத்தியசாலையில்

(பூந்தோட்டம்)

கொக்காவில் பகுதியில் கடந்த மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற வெடி விபத்தில் காயமடைந்தவர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு, துணுக்காய் பகுதியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் ஜெயராஜ் என்பவரே இவ்வாறு கண்ணில் ஏற்பட்ட பாதிப்பு காரண ங்களுக்காக மேலதிக சிகிச்சை பெறுவதற்கு கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள் ளார்.

கடந்த மாதம் 30ஆம் திகதி இவர் கிரவல் ஏற்றுவதற்கு கொக்காவில் பகுதிக்குச் சென்ற போது, அப்பகுதியில் இருந்த குப்பைகளுக்கு சிலர் நெருப்பு வைத்தபோது இவ்விபத்து ஏற்பட்டிருந்தது. இதனையடுத்து காயமடை ந்த ஜெ.ஜெயராஜ் மல்லாவி வைத்தியசாலை க்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டிருந்தார்.

அங்கு சில நாட்கள் சிகிச்சை பெற்ற நிலை யில் மீண்டும் மல்லாவி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், அவருடைய கண் பகுதியில் ஏற்பட்ட பார்வைப் பாதிப்பு காரணமாக தற்போது கண்டி வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ-266)

# கைதிகளிடையே இளைஞர் கழகம் அமைக்க நடவடிக்கை

கைதிகளிடையே இளைஞர் கழகங்கள் அமைக்கும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இளைஞர் விவகார மற்றும் திறன் அபி விருத்தி அமைச்சின் ஆலோசனையின் பேரில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவை கள் மன்றத்தினால் இந்த திட்டம் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.

இந்த திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு சிறைச் சாலையில் இளைஞர் கழகம் அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு சிறைச்சாலை நலன்புரி அதிகாரி கே.ஸ்ரீனிவாசன் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் கே.தவராஜா மற்றும் சிறைச் சாலை அத்தியட்சகர் கித்ஸ்ரீ பண்டார உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு சிறையிலுள்ள கைதிகளில் 29 வயதிற்குட்பட்டோர் இந்த இளைஞர் கழ கத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இவர்களிலிருந்து இளைஞர் கழகத்திற் கான தலைவர், செயலாளர் மற்றும் பொரு ளாளர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மீண்டும் இலங்கை வந்தார் இலங்கைக்கான சவுதி தூதுவர்

(கொழும்பு)

இலங்கைக்கான சவுதி அரேபியா தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ் அண்மையில் இலங்கை திரும்பியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் அழைக்கப் பட்ட நிலையிலேயே அவர் நாடு திரும்பியுள் ளார்.


சவுதிஅரேபியாவில் பணிப்பெண்ணாக கடமையாற்றிய மூதூரைச் சேர்ந்த ரிசானா நபீக்கிற்கு கடந்த ஜனவரி 9 ஆம் திகதி சிரச்சேதம் செய்யப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சவுதிஅரேபியா வுக்கான இலங்கை தூதுவர் அஹமட் ஜவாத் கடந்த ஜனவரி 9ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தினால் மீளழைக்கப்பட்டார்.

இதனையடுத்து இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாசை 24 மணித்தியாலங்களுக்குள் நாடு திரும்புமாறு சவுதிஅரேபிய அரசாங்கம் கடந்த பெப்ரவரி 10 ஆம் திகதி அறிவித்தது.

இந்நிலையில் சவுதிஅரேபியாவுக்கான இலங்கை தூதுவராக வீ.கிருஷ்ணமூர்த்தி அண்மையில் நியமிக்கப்பட்டார்.

இதனையடுத்தே இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ் இலங்கை திரும்பியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ-2)



போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு இமை தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் துவிச்சக்கரவண்டிகள் அண்மையில் யாழ்ப்பாணம் ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பேராசியர் சிவச்சந்திரன் மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்குவதையும் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :-எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி மக்களின் வீடமைப்புக்கு குறைந்த விலையில் மணல் வழங்கல்

## புவிச்சரிதவியல் பணிப்பாளர் தகவல்

(கொழும்பு)

மீள்குடியேற்றப்படும் வடமாகாண மக்களுக்கு வீடு கட்டுவதற்காக குறைந்த விலையில் மணல் வழங்க புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தீர்மானித்துள்ளது.

முதலில் இந்திய அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்படும் 50 ஆயிரம் வீட்டுத்திட்ட வீடுகளை துரிதமாக நிர்மாணிப்பதற்கு நிவாரண அடிப்படையில் மணல் வழங்கவுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியக பணிப்பாளர் நாயகம் அனில் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் வடபகுதியிலுள்ள வீடுகள் பெருமளவு சேதமடைந்தன. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் மக்கள் மீள் குடியேற்றப்பட்டு வருவதோடு, அரசாங்கமும் ஏனைய அமைப்புகளும் புதிதாக வீடுகளை நிர்மாணித்து வருகின்றன.

மணல் தட்டுப்பாடு காரணமாக வடபகுதியில் வீடுகளை நிர்மாணிப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. 50 ஆயிரம் இந்திய வீட்டுத் திட்டத்தை செயற்படுத்துவதிலும் பாதிப்பு எழுந்துள்ளதாக அறியவருகிறது.

இது குறித்து புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியக அதிகாரிகளுக்கும் முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்குமிடையில் நேற்று முன் தினம் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

மீள்குடியேறும் மக்களுக்கு வீடு கட்டுவதற்கு காணிகளைப் பெற உதவவும் வீடு கட்டுவதற்கு நிவாரண விலையில் மணல் வழங்கவும் உள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

யுத்தத்தினால் பல வருடங்கள் துன்ப மடைந்த பின்னர், தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ள மக்களுக்கு உதவுவது எமது பொறுப்பு என்று குறிப்பிட்ட அவர், தேவையான மணலை சிரமமின்றி அடிப்படையில் வாகனங்களில் ஏற்றிச் சென்று வழங்குவது குறித்தும் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களை துரிதமாக நிறைவுசெய்ய புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் உதவ முன்வந்துள்ள தாகவும் இதனூடாக வட பகுதி மக்கள் நன்மையடைய உள்ளதாகவும் முல்லைத்தீவு அரச அதிபர் வேதநாயகம் கூறினார். (அ-2)

# கஞ்சா கடத்தலில் பொலிஸ்

(கொழும்பு)

கஞ்சா கடத்தி விற்பனையில் ஈடுபட்டுவந்த சம்மாந்துறை பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் இரண்டரை கிலோ கஞ்சாவை நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிளில் கடத்தி சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை, ஊவா பறணகம பிரதேசத்தில் வைத்து கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீண்டகாலமாக அம்பாறை,உஹனை பிரதேசத்திலிருந்து வெலிமடை ஊவா பறணகம பிரதேசத்திற்கு கஞ்சா கடத்தி விற்பனையில் ஈடுபட்டு வந்தவரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக பண்டாரவளை பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் விஜய சேகரவின் பணிப்புரைக்கமைய,மேலதிக விசாரணைகளை ஊவா பறணகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழு மேற்கொண்டு வருகின்றது. (அ-2)

# நாடுகடந்த தமிழீழ அரசின் சர்வதேச கருத்தரங்கு

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் இன்று முதல் 18 ஆம் திகதி சனிக்கிழமை வரை சர்வதேச கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளது.

தமிழீழத்துக்கு ஆதரவான போராட்டத்தை சர்வதேச அரங்கில் முன்னெடுத்துச் செல்வதற்காக இந்த அமைப்பு புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் சாசனத்தை இறுதி செய்வதற்காகவே இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் டில்லியைச் சேர்ந்த உச்ச நீதிமன்ற சட்டத்தரணியும் டில்லி தமிழ் சட்டத்தரணிகள் சங்கப் பொதுச் செயலருமான ராம்சங்கர் பங்கேற்கவுள்ளார்.

இது குறித்து டில்லியில் செய்தியாளர்களிடம் கடந்த திங்கட்கிழமை பேசிய அவர், நான் புலம் பெயர்ந்த தமிழர்களின் நலனுக்காகவும் தமிழீழ அரசியல் சாசனம் அமைப்பது தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கியிருந்தேன். அதைத் தொடர்ந்து, கருத்தரங்கில் பங்கேற்க வரும்படி அழைப்பு விடுத்துள்ளனர் என்றார். (அ-2)

# பள்ளிவாசல் மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பின் கொலன்னாவயிலுள்ள முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அதன் அண்மையிலிருந்த வர்த்தக நிலையம் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதல் காரணமாக பள்ளிவாசலுக்கும் வர்த்தக நிலையத்துக்கும் சேதமேற்பட்டுள்ளது.

இது தொடர்பில் இருவர் வெல்லம்பிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்குதல் நடத்தியோர் மது போதையில் இருந்தனர் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். (அ -2)




வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தின் ஏற்பாட்டில் வதிரியில் அமைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளுக்கான இலவச கணனிப் பயிற்சி நிலையத்தின் ஆரம்ப விழா அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை ஞானசம்பந்த கலைமன்ற முகாமைத்துவ ஆலோசகர் உரை நிகழ்த்துவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: [illegible])

# ஆரம்பக் கல்வி மாணவர்களின் வலயமட்ட சித்திரப் போட்டி முடிபுகள்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் உள்ள ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் சித்திரப் போட்டியில் வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்களை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எல். மாலினி வெளிற்றன் அறிவித்துள்ளார்.

அவற்றின் விபரம் வருமாறு,

**தரம்-I**

க. தேன்மொழி (மு/விநாய கபுரம் அ.த.க பாடசாலை), கோ. சாதுரியன் (மு/மயில் வாகனம் தமிழ் வித்தியாலயம்), சு.திகழ்யாழ் (மு/தென்னியன் குளம் அ.த.க பாடசாலை).

**தரம்-II**

த.எயுஜின் (மு/ அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலயம்), க.ரிசிகன் (மு/பாலிநகர் ம.வி), செ.மேஷாக் (மு/ அம்பாள்புரம் தமிழ் வித்தியாலயம்)

**தரம்-III**

கே. அபிநேகா(மு/ கருவேலன் கண் டல் அ.த.க பாடசாலை), த.ரேணுகா (மு/ மயில் வாகனம் தமிழ் வித்தியாலயம்), வ. ஆகதி (மு/ வவுனிக்குளம் படிவம் 4 அ.த.க. பாடசாலை).

**தரம்-IV**

அ.வேணுசன்(மு/ விநாயகபுரம் அ.த.க பாடசாலை), பா. ஜஸ்மியா (மு/தண்டுவான் அ.த.க பாடசாலை), த.எயுஜி (மு/ அனிஞ்சியன் குளம் அ.த.க பாடசாலை).

**தரம்- V**

வி.லக்சிகன் (மு/ அனி ஞ்சியன் குளம் அ.த.க. பாடசாலை), வி.தர்மினி (மு/ ஒட்டு சுட்டான் இ.த.க. பாடசாலை), சா. சிஷாளினி (முத்தயன் கட்டு இடது கரை அ.த.க பாடசாலை). (அ-3-15)

# கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

## அபிவிருத்தி தொடர்பில் ஆராயப்படும்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பசில் ராஜபக்ஷ தலைமையில் கிளி/மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான பல முன்மொழிவுகளும், திட்ட வரைபுகளும் சமர்ப்பித்து அதனை அமுலாக்கம் செய்யும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் வாய்ப்புக்கள் உள்ளன.

பல கிராமங்களையும் , அக்கிராமங்களின் வீதிகளையும் பாதிப்புக்குள்ளாக்கும் வகையிலான உருத்திரபுரம் கிழக்கு , உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் கிராமங்களுக்கு தெற்குப்புறமாக உள்ள பெரிய கழிவு வாய்க்கால் திருத்தம் சம்பந்தமாக திட்டவரைபும், முன்னுரிமையும் ஏற்படுத்தப்பட வேண்டுமென இப் பகுதி கிராமங்களின் பொது அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் இப் பகுதிக்கான வேலைத்திட்டம் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, இந்த வருட நிதி ஒதுக்கீட்டில் செயற்படுத்துவதென தெரிவிக்கப்பட்டபோதிலும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, சம்பந்தப்பட்ட அலுவலர்கள், அரசியலாளர்கள் நடைபெறவுள்ள கிளி/மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இவ் விடயத்தையும் முன்மொழிவில் சேர்த்து ஆவன செய்ய வேண்டுமென பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுக்கின்றன. (அ-3-254)

# காணிக்குள் அத்துமீறல்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் அமைந்திருந்த ஐயனார் கோவில் சிலை அப்புறப்படுத்தப்பட்டு அக்காணியில் தனியார் ஒருவர் அத்துமீறி நுழைந்துள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திருநெறிக் கழகத்தினரும், இப் பகுதியைச் சேர்ந்த 136 குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் கையொப்பமிட்டு கரைச்சி பிரதேச செயலருக்கு மகஜர் மூலம் முறையிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து கோயில் காணியை விடுவித்து தரவேண்டுமென அப்பகுதி மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (அ-3-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு

# அழைப்பு விடுத்தார் பாக்.பிரதமர் நவாஸ்



பாகிஸ்தானில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் நவாஸ் செரீப் கட்சி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை கைப்பற்றியது.

இவ்வெற்றியைப் வாழ்த்தி, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நவாஸ் செரீப்புக்கு கடிதம் அனுப்பியிருந்தார். அதில் இரு நாட்டு நல்லுறவு மேம்பட வேண்டும் என்று மன்மோகன் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் இந்தியாவுக்கு வருகை தரும்படி நவாஸ் செரீப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் ராவல்பிண்டியில் நேற்று நவாஸ் செரீப் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது,

பதவி ஏற்பு விழாவிற்கு பிரதமர் மன் மோகன சிங்கை அழைப்பீர்களா? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், 'பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அழைப்பு விடுப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் வரலாம் அல்லது வராமலும் போகலாம் அது வேறுவிடயம். ஆனால் அவர் பாகிஸ்தானுக்கு வருவார் என நம்புகிறேன்' என்றார். மேலும் அவர் கூறுகையில்,

'என்னுடன் மன்மோகன்சிங் தொலைபேசியில் உரையாடினார். இருவரும் நீண்ட நேரம் பேசினோம். அவர் என்னை அழைத்தது போலவே நானும் அவரை பாகிஸ்தானுக்கு வரும்படி அழைத்தேன்' என்றார்.

### மீண்டும் கார்கில் போர் வராது

புதிய பிரதமராக நவாஸ்செரீப் வந்த பின் இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலில்,

தற்போது பாகிஸ்தான் தீவிரவாதிகளின் கைகளில் சிக்கி தவிக்கிறது. தீவிரவாதம் பர்வேஷ் முஷாரப் விருப்பத்தின் பேரில் உருவாக்கப்பட்டது. பாகிஸ்தான் மண்ணில் இருந்து இனி இந்தியாவுக்குள் தீவிரவாதிகள் ஊடுருவ அனுமதிக்கமாட்டோம் என்பதை உறுதியுடன் தெரிவிக்கிறேன். இந்தியாவுடன் நட்புறவுடன் இருக்கவே நாங்கள் விரும்புகிறோம். இனியும் ஒரு கார்கில் போர் நடைபெற அனுமதிக்கமாட்டோம் என்று கூறியுள்ளார்.

### வரவேற்றது அமெரிக்கா

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளுமாறு மன்மோகன் சிங்கிற்கு விடுத்த அழைப்பை அமெரிக்கா வரவேற்றுள்ளது. இந்த அழைப்பு ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கு வழி வகுக்கும் என அமெரிக்கா கருத்து தெரிவித்துள்ளது.

### எல்லை முறுகலைத் தணிக்க

# இந்தியா வருகிறார் சீன ஜனாதிபதி



இந்திய எல்லையில் திட்டமிட்டு ஊடுருவல் நடத்தவில்லை என சீன அரசு புது விளக்கம் அளித்துள்ளது சீன அரசு. அத்துடன் இந்திய எல்லையான லடாக்கில் நடந்த ஊடுருவல் சம்பவம் இந்திய-சீன உறவுகளை பாதிக்காது எனவும் இரு நாட்டு எல்லைகளை தீர்மானிப்பதற்காக இந்தியாவுடன் தீவிர பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சீன வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் சீன ஜனாதிபதி லி கியாங் முதன் முறையாக விரைவில் இந்தியா வரவிருக்கிறார்.

சீன ஜனாதிபதியின் இந்திய வருகையானது எல்லைப் பிரச்சினையில் சுமுகமான அணுகுமுறையை கையாள சீனா முடிவெடுத்துள்ளதாக தெரிகிறது.

சீன ஜனாதிபதியின் வருகையின்போது இருநாட்டு எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### சமையல் படையணி



இந்திய இராணுவத்தில் சமையல் பிரிவுக்கு பொருத்தமானவர்களை தேர்வுசெய்வதற்கான நிகழ்வு மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற இளைஞர்கள் சமைத்த உணவை இராணுவ அதிகாரிகள் பரிசோதிக்கும்போது..

# இந்திய எல்லையில் புதிய படைப் பிரிவு

### - வலியுறுத்துகிறார் இராணுவத் தளபதி



சீனாவுடனான வடகிழக்கு எல்லைப் பகுதியில் தாக்குதல் படைப் பிரிவை அமைப்பது குறித்து மத்திய அரசு விரைவில் முடிவெடுக்க வேண்டுமென்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனியிடம் இராணுவ தலைமை தளபதி விக்ரம் சிங் வலியுறுத்தியுள்ளார்.

சமீபத்தில் சீனா இராணுவம் காஷ்மீரின் லடாக் பகுதியில் ஊடுருவி முகாம்களை அமைத்து அத்துமீறலில் ஈடுபட்டது. வடகிழக்கு எல்லையிலும் இதுபோன்ற ஊடுருவல்களைத் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகிறது. இந்த சூழ்நிலையில் இராணுவ தலைமை தளபதியும் மத்திய அரசிடம் இதனை வலியுறுத்தியுள்ளார்.

எல்லை பாதுகாப்பு தொடரபான ஆலோசனைக் கூட்டம் டில்லியில் திங்கட்கிழமை நடைபெற்றது. மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி, இராணுவ தலைமை தளபதி விக்ரம் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன், பாதுகாப்புத் துறை செயலாளர் சசிகாந்த் சர்மா, பாதுகாப்புத் துறை, இராணுவ உயரதிகாரிகள் உட்பட பலர் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

சீனாவின் ஊடுருவலை அடுத்து, எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியில் இப்போது நிலவி வரும் சூழ்நிலை, அங்கு பாதுகாப்பை மேம்படுத்த மேற கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

சீனாவுடனான வடகிழக்கு எல்லையில் புதிய தாக்குதல் படைப் பிரிவு அமைக்கும் திட்டம் குறித்து மத்திய அரசு விரைந்து முடிவெடுக்க வேணடுமென்று தளபதி விக்ரம் சிங் வலியுறுத்தினார்.

இந்த புதிய படைப் பிரிவு அமைந்தால் அதில் பீரங்கி பிரிவு, கவச வாகன பிரிவு உள்ளிட்டவை இணைக்கப் படவேண்டும் என்றும் சீனா அத்துமீறி இந்திய எல்லைக்குள் நுழைந்தால் அதற்கு தகுந்த பதிலடி கொடுக்க தாக்குதல் படைப் பிரிவு எந்த நேரமும் தயாராக இருக்க வேண்டும் என்றும் கூறினார் இராணுவத் தளபதி.

# சட்டப்படி எதிர்கொள்வோம் - ராமதாஸ்

வடமாவட்டங்களில் ஏற்பட்ட வன்முறைகள் குறித்த தமிழக முதல்வரின் குற்றச்சாட்டு அபத்தமானது என்று பாமக நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர், தமது அதிகார எல்லையை மறந்து பா.ம.க. தடை செய்யப்போவதாக கூறியிருக்கிறார். எந்தவொரு அரசியல் கட்சி மீதும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு மட்டுமே உண்டு. தமிழக அரசின் அனைத்து அடக்கு முறைகளையும், அச்சுறுத்தல்களையும் பா.ம.க. சட்டப்படி எதிர் கொள்ளும். அதே நேரத்தில் அதிகாரம் தம்மிடம் உள்ளது என்ற எண்ணத்தில் ஜெயலலிதா கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறைகளுக்கு தமிழக மக்கள் தக்க நேரத்தில் சரியான பாடத்தை புகட்டுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையே இனிமையான எதிர்காலங்களை உருவாகிறது.

~ அரவிந்த அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வெள்ளிக்கிழமை ரியூசன் விடுமுறை

வெள்ளிக்கிழமையில் தனியார் கல்வி நிறுவனங்கள் பூட்டப்பட்டு மாணவர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

மாணவர்களிடையே ஆன்மீகத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திங்கள் தொடக்கம் வெள்ளிவரையான கிழமை நாட்களில் பாடசாலையில் கற்றல், பின்னர் மாலை நேரங்களில் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லுதல்,

எஞ்சிய சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் முழு நேர தனியார் கல்வி நிறுவனப் படிப்பு என மாணவர்களின் நேரம் செலவாகிறது.

நிலைமை இதுவானால், பிள்ளைகளுக்கு ஓய்வு என்பது உண்டா? ஓய்வில்லாத கல்வியால் என்ன பயன்? பாடசாலை – தனியார் கல்வி நிறுவனம் என்று மாறிமாறி கற்றல் செயற்பாடு நடைபெறும் போது, அறிவு மந்தமடைகிறது. மன அழுத்தம் அதிகரிக்கிறது.

கடுமையான கற்றல் சுமையும் ஓய்வில்லாத படிப்பும் மாணவர்களின் திறனில், ஆளுமையில், உடல் ஆரோக்கியத்தில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

இத்தகையதொரு கடுமையான கற்றல் முறைமை வெற்றி தரவில்லை என்பதற்கு இலங்கையின் கடந்தகாலக் கல்விப் பெறுபேற்றில் வடக்கு மாகாணம் கடைசி இடமான ஒன்பதாவது இடத்தில் இருப்பது தக்க சான்றாகும்.

மாணவர்கள் நிறையக் கற்க வேண்டும் என்பதும் தரம் 5 புலமைபரிசில் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சை என்பன இலங்கையில் போட்டிப் பரீட்சை என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

எனினும் கடுமையான கற்றல் சுமை எங்கள் மாணவச் செல்வங்களின் வளத்தை நிர்மூலமாக்கி விடுகின்றதென்ற முடிபுகள் கடும் வேதனைக்குரியவை.

இவை மாற்றியமைக்கப்படாவிடில், எங்கள் மண்ணில் துன்பகரமான சம்பவங்களே நடக்கும். எனவே மாணவர்களின் ஓய்வுக்காக – மன ஆறுதலுக்காக – இறை வழிபாட்டிற்காக – வீட்டில் தங்கியிருந்து பெற்ற தாய், தந்தை, சகோதரங்கள், உறவுகள், அயலவர்கள் என்ற சமூகக் கட்டமைப்புடன் ஒரு கூட்டு உறவை ஏற்படுத்த வெள்ளிக்கிழமை விடுதலை வழிவகுக்கும் என்பது சமூக நலன் கருதுவோரின் நம்பிக்கை.

எனவே தனியார் கல்வி நிறுவனங்கள் வெள்ளிக்கிழமையில் விடுமுறை வழங்க வேண்டும் என்ற யாழ்.மாநகரசபையின் தீர்மானத்தை ஏனைய பிரதேச சபைகளும் பின்பற்றுவது சாலப் பொருத்துடையதாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜும்மா தொழுகைக்காக மோட்டார் சைக்கிளில் செல்லும் முஸ்லிம்கள் தலைக்கவசம் (ஹெல்மெட்) அணியத் தேவையில்லை என்று அந்த மாவட்ட எல்லைக்குள் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்ற தகவலை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

எங்கள் நிலைமை புரியும்.

# பனிக்கட்டி தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டும்

## கரைச்சி வடக்கு க.தொ. கோரிக்கை

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு பனிக்கட்டி (ஐஸ்) தொழிற்சாலை அமைத்துத் தருமாறு அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கும் 7 அங்கத்துவசங்கங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீன்பிடித் தொழிலாளர்கள் உள்ளபோதும் இங்கு பனிக்கட்டி தொழிற்சாலை நிறுவாமையினால் இத்தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடற்றொழிலில் ஈடுபடுவோர் மீன்களைப் பழுதடையாமல் பாதுகாக்க பனிக்கட்டி முக்கிய பொருளாக விளங்குகின்றது. இங்குள்ள தொழிலாளர்கள் ஆகிய பிரதேசங்களில் இருந்து அதிக விலை கொடுத்து பெரும் சிரமத்தின் மத்தியில் பனிக்கட்டிகளைப் பெற்றுக்கொள்கின்றனர். அவ்வாறு பெறப்பட்டாலும் தொழிற்சாலை இல்லாத காரணத்தால் இப்பனிக்கட்டிகளை நீண்டநாட்களுக்கு பயன்படுத்த முடியாத நிலையுள்ளது. இதனால் பாதுகாப்பாக வைக்கப்படும் கடலுணவுகள் குறுகிய நேரத்தின் பின்னர் பழுதடைந்து விடுகின்றன.

எனவே, இதனைக் கவனத்திற்கொண்டு தமக்கு பனிக்கட்டித் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென அப்பகுதி மீனவர்கள் இத்துறைசார் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-264)

## எண்ணெய்க்காப்பு சாத்துதல்

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் எதிர்வரும் ஜூன் மாதம் 25ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. மறுநாள் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.36 மணி தொடக்கம் 10.36 மணிவரைக்கும் உள்ள சுபமுகூர்த்தவேளையில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 48 நாட்கள் நடைபெறவுள்ள மண்டலாபிஷேகத்தில் இணையவுள்ள அடியார்கள் ஆலய அறங்காவலர் சபையினரிடம் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3,19)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ மகமாரி அம்பாள் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு 29 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக நிகழ்வை தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று இறுதி நாள் அன்று சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (அ)

## பரிசளிப்பு விழாவும் மருதம் மலர் வெளியீடும்

(சிவநகர்)

கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் மருதம் மலர் வெளியீடும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கலந்து கொள்ளவிருக்கிறார். சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ. அமிர்தலிங்கம், வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்கள பண்ணை முகாமையாளரும் (பயிற்சி) பழைய மாணவருமான க.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-254)

# மேற்குலக நாடுகளிடம் நாம் உதவி பெறவில்லை

## பொது பல சேனா தெரிவிப்பு

(கொழும்பு)

மேற்குலக நாடுகளிடம் நிதி திரட்டியதை நிரூபித்தால் இரண்டு மணி நேரத்துக்குள் பொது பல சேனா அமைப்பை நீக்கிவிடுவதாக அதன் செயலாளர் கலபோட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நோர்வே, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளிடம் பொது பல சேனா நிதி திரட்டியதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியிருந்தார்.

முடிந்தால் இதனை நிரூபிக்கும்படி வீரவன்சவுக்கு தாம் சவால் விடுவதாகவும் அமைப்பின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

தமது அமைப்பு மேற்கு நாடுகளிடம் இருந்து ஐந்து சதத்தைக் கூட பெறவில்லை எனவும் தேரர் கூறியுள்ளார்.

எது எவ்வாறு இருப்பினும் விமல் வீரவன்சவுக்கு இந்தியாவின் சிவசேனா அமைப்புடன் தொடர்பு உள்ளதா என்ற சந்தேகம் இருப்பதாக ஞானசார தேரர் குறிப்பிட்டார்.

பொது பல சேனா குறித்து விமல் வீரவன்சவைப் போல சிலர் கூறிய விடயங்கள் அனைத்தும் பொய் எனவும் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# வடக்கு மாகாண சபை தேர்தலில் ஸ்ரீ.மு.கா.கட்சி தனித்து போட்டி

## அதன் பொதுச் செயலாளர் ஹசன் அலி

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் கூட்டணி சேராது எனவும் தேர்தலில் தனித்தே போட்டியிட உள்ளதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில கடும்போக்குவாத சக்திகளின் தேவையற்ற அடக்குமுறைகள் குறித்து முஸ்லிம்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ள போதிலும் பொலிஸார் அதனைக் கவனத்திற் கொள்ளத் தவறியுள்ளனர்.

17 ஆம் திருத்தச் சட்டத்தில் காணப்படும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை இரத்துச் செய்யும் வகையில் 19 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் காணிமற்றும் பொலிஸ் அதிகாரங்களை இரத்துச் செய்வது அநீதியானதும் கூட. இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தாம் தயார் எனவும் 19ஆம் திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவார் அசாத் சாலி

கொழும்பு மாநகர சபை முன்னாள் பிரதி மேயரும் தமிழ், முஸ்லிம் கட்சியின் தலைவருமான அசாத் சாலி மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணையவுள்ளார் என் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பேச்சுவார்த்தை ஒன்று அசாத் சாலிக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் உயர்மட்டத்துக்குமிடையில் மிக இரகசியமான முறையில் இடம்பெற்றதாக நம்பகமான வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு எட்டு நாட்களின் பின்னர் விடு தலை செய்யப்பட்ட அசாத் சாலி பின்னர் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட போது அவரை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உட்பட முக்கியஸ்தர்கள் நேரில் சென்று பார்வையிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



## உள்ளம் கடவுளிடம் இருக்கட்டும்!

✦ புலி மற்ற மிருகங்களைக் கொன்றுவிடும். அதுபோல் பக்தி என்னும் புலி காமம், குரோதம் முதலானவற்றைக் கொன்றுவிடுகிறது. இதயத்தில் பக்தி வளருமானால் காமமும் ஏனைய மிருக உணர்ச்சிகளும் அடியோடு மறைந்து விடும்.

✦ பொட்டலம் கிழிந்து கடுகு சிதறிவிட்டால் அவற்றை ஒன்று சேர்ப்பது மிகவும் கடினம். அதுபோல பல்வேறு திசைகளில் ஓடுகின்ற மனதை உட்குவித்து ஒருமுகப்படுத்துவது எளிதான செயல் அல்ல. மனதை ஒருமுகப்படுத்துவதற்கு நல்லவர்களுடன் நாடிச்சேர்வது மட்டுமே வழி.


✦ சிறு இழை ஒன்று நீட்டிக்கொண்டிருந்தாலும் ஊசியின் காதுவழியாக நூல் நுழைய முடியாது. உலகப் பொருட்களில் சிறிது பற்று இருந்தாலும் நம்மால் கடவுளை அணுகமுடியாது.

✦ மனைவி, மக்கள், பெற்றோர் அனைவருடனும் சேர்ந்து குடும்பமாக வாழுங்கள். ஆனால் உள்ளத்தை மட்டும் கடவுளிடம் இருத்துங்கள்.

✦ முட்செடிகளை விரும்பி உண்ணும் ஒட்டகத்தின் வாயில் இரத்தம் ஒழுகும். அதுபோல உலகியல் இன்பங்களில் நாட்டம் கொண்டு மனிதன் எத்தனையோ வேதனைகளையும் துன்பத்தையும் அனுபவிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் உருவம் பதித்த தங்க நாணயம்



சச்சின் டெண்டுல்கரின் உருவம் பொறிக் கப்பட்டிருந்த தங்க நாணயத்தை அக்ஷய திருதியை தினத்தையொட்டி தனியார் நிறு வனம் திங்கட்கிழமை வெளியிட்டது.

நாணயத்தில் சச்சினின் முகம் மற்றும் அவரது பெயர் இடம்பெற்றுள்ளது.

மிகக் குறைவான அளவில் தயார் செய் யப்பட்ட 10 கிராம் எடையுள்ள இந்த நாணய வெளியீட்டு நிகழ்ச்சியில் சச்சின் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

வேல்யூமார்ட் தங்க ஜுவல்லரி நிறுவனத் தின் விளம்பரத் தூதராக சச்சின் நியமிக்கப் பட்டுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி யில் கலந்துகொண்ட சச்சின் கூறுகையில், ஆடுகளத்தில் பல பொன்னான நேரங்களை அனுபவித்துள்ளேன். ஆனால், இந்த நிகழ்ச்சி எனக்கு புதிய அனுபவத்தை தந்துள்ளது.

ஹிந்து நாட்காட்டியில் அக்ஷய திருதியை நாள் மிகவும் புனிதமானது. இந்த நாளில் அனை வருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித் துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

# மது வேண்டாம்



ஐபிஎல் போட்டியில் புனே வாரியர்ஸ் அணிக்காக விளை யாடி வரும் பர்வீஸ் ரசூல், மது பான நிறுவன லோகோ பதித்த ஜெர்ஸியை (விளையாட்டு உடை) அணிய மறுத்துள்ளார்.

அவ்வாறு அணிவது தனது மதத்துக்கு எதிரானது. அதனால் அந்த லோகோவை மறைத்தே விளையாடினேன் என்றும் அவர் கூறியுள் ளார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

எனது ஆடையில் மதுபான நிறுவனம் ஒன்றின் முத்திரை பதிக்கப்பட்டிருந்தது. அதனை நான் மறைத்திருந்தேன்.

இதைப் பார்த்த சக வீரர்கள் ஆச்சரியமடைந்தனர். மது அருந்து வது எனது மதத்துக்கு எதிரானது. அதனால், இந்த முத்திரையைக் கொண்ட ஆடையை அணிந்து விளையாடமாட்டேன் என்று அவர் களிடம் தெரிவித்தேன். எனது நம் பிக்கை எனக்கு மிக உயர்ந்ததா கும். இதனால, எனது குடும்பத்தின மகிழ்ச்சி கொண்டனர் என்று தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த முதல் கிரிக்கெட் வீரர் என் பெருமையைப் பெற்றவர் ரசூல். சுழற்பந்து வீச்சாளரான இவர், ரஞ்சி கிண்ணத் தொடர் மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான பயிற் ஆட்டத்தில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றி அணித் தேர்வாளர் ளின் கவனத்தை ஈர்த்தார். இதைத் தொடர்ந்து ஐபிஎல் போட்டியி விளையாடும் புனே வாரியர்ஸ் அணிக்காக தேர்வு செய்யப்பட்டார்.

# 5 ஆவது முறை சம்பியனானார்கள் அமெரிக்க இரட்டையர்கள்



மேட்ரிட் ஓபன் டெனிஸ் போட்டியில், இரட்டையர் பிரிவு பட்டத்தை அமெரிக்காவின் பிரையன் சகோதரர்கள் 5ஆவது முறையாக தட்டிச்சென்றனர்.

ஸ்பெயினின் மேட்ரிட் நகரில் நடந்து வரும் இப்போட்டியில் நடைபெற்ற இரட்டையர் போட்டியில், அமெரிக்காவின் பாப் பிரையன், மைக் பிரையன் சகோதரர்கள், ஆஸ்திரியாவின் அலெக்சாண்டர் பெயா, பிரேசிலின் புரூனோ சோவரெஸ் ஜோடியுடன் மோதியது. இதில், 6.2, 6.3 என்ற செட் கணக்கில் பிரையன் சகோதரர்கள் வெற்றி பெற்றனர். 58 நிமிடங்களில் இந்த ஆட்டம் முடிவுக்கு வந்துவிட்டது.

இதன் மூலம் 5ஆவது முறையாக மேட்ரிட் இரட்டையர் பட்டத்தை அவர்கள் வென்றனர். மேலும், தங்களது டெனிஸ் வாழ்க்கையில் இவர்கள் பெறும் 87ஆவது பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல்.இல் 10 ஆவது அணி

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் 10ஆவது அணியை ரி20 லீ ஆட்டங்களில் சேர்ப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக ஐ.பி.எ தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார். அத்துடன் ஒரு குழுவி அதிக அளவாக 4 வெளிநாட்டு வீரர்களுக்கு மேல் விளையாட அனு இல்லை என்ற தற்போதைய நிலையில் மாற்றம் செய்யப்படமாட் என்றும் தெரிவித்தார்.

# பாக்.வீரர்களை கண்காணிக்க ஏற்பாடு

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் 2010ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற போது சூதாட்ட பிரச்சினையில் சிக்கினர். இதனால் அடுத்த மாதம் மினி உலகக் கிண்ணப் போட்டிக்கு பாகிஸ்தான் அணி இங்கிலாந்துக்கு செல்லும் போது, அவர்களை கண்காணிக்க சிறப்பு பாதுகாப்பு அதிகாரி ஒருவரையும், லஞ்ச ஒழிப்பு அதிகாரி ஒருவரையும் நியமிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

# "நான் பார்த்ததில் நேர்த்தியான ஆட்டம்"

## வொட்சனுக்கு புகழ்மாலை சூட்டுகிறார் டிராவிட்



சென்னை அணியுடனான போட்டியில் வெற்றி பெற்று 10ஆவது வெற்றியை ருசித்தது ராஜஸ்தான். அணியின்வெற்றி குறித்து தலைவர் ராகுல் டிராவிட் கூறுகையில், 'ஷேன் வொட்சன் இது போன்று அதிரடியாக விளையாடுவார் என்று நாங்கள் நம்பினோம். ஏனெனில் தனிநபராக வெற்றியை தேடி தரக்கூடிய உண்மையான ஒரு மேட்ச் வின்னர் வொட்சன். அஸ்வின் பந்து வீச்சில் (ஒரே ஓவரில் 23 ஓட்டங்கள்) வொட்சன் விளாசியதும் நெருக்கடி குறைந்தது. நான் பார்த்ததில், இது மிகவும் நேர்த்தியான ஒரு ஆட்டம்.

ஒரு கட்டத்தில் 45 ஓட்டங்களில் 4 விக்கெட்டுகளை இழந்ததால் கடுமையான நெருக்கடியில் சிக்கினோம். ஆனால் வொட்சன், பஞ்சாப் வீரர் டேவிட் மில்லர் போன்று (38 பந்தில் சதம் அடித்தவர்) ஒரு இன்னிங்சை ஆடி ஆட்டத்தின் போக்கை மாற்றி விட்டார். இதே போல் ஸ்டூவர்ட் பின்னியின் ஆட்டத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. அவர் நெருக்கடியை கையாண்ட விதம், பக்குவமடைந் திருப்பதை காட்டுகிறது. அவரது செயற்பாட்டை, தேர்வு குழுவினர் கவனித்துக் கொள்ள இதுவே சரியான நேரமாகும்.

20 ஓவர் கிரிக்கெட்டில் அவர் ஆட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதில் திறமை வாய்ந்தவர். இதே போல் பந்து வீச்சிலும் தனது பங்களிப்பை அளித்து வருகிறார். அவரால் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்துள்ளேன்' என்றார்.

தோல்வி குறித்து சென்னை அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் கூறுகையில், ஷேன் வொட்சனிடம் இருந்து அசாத்தியமான ஒரு துடுப்பாட்டம் வெளிப்பட்டிருக்கிறது. இந்த ஆடுகளத்தில் ஒவ்வொருவரும் தடுமாறிக் கொண்டிருந்த நிலையில், அவர் மிக வேகமாக ஆட்டத்தின் தன்மையை மாற்றிவிட்டார். 4 அல்லது 5 ஓவர்களில் ஆட்டத்தை எங்களிடம் இருந்து முழுமையாக பறித்து விட்டார்' என்றார்.

இன்றைய ஆட்டங்கள்

Kolkata Knight Riders Vs Pune Warriors India

மாலை 4 மணி


இரவு 8 மணி

Mumbai Indians Vs Rajasthan Royals

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப்பிடம் வாங்கிக் கட்டியது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்

## கில்கிறிஸ்ட் அதிரடி



இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் நேற்றைய முதலாவது போட்டியில் அடம் கில்கிறிஸ்ட்டின் அதிரடியால் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது. ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கெதிராக அவ்வணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

பெங்களூர் எம்.சின்னசுவாமி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது விக்கெட்டை 4.1 ஓவர்களில் 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் இழந்த அவ்வணி, அதன் பின்னர் அதிரடியாக ஆடியது. இரண்டாவது விக்கெட்டுக்காக 136 ஓட்டங்கள் குவிக்கப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் 'அணி சார்பாக கிறிஸ் கெயில் 53 பந்துகளில் 77 ஓட்டங்களையும், விராட் கோலி 43 பந்துகளில் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பர்வீந்தர் அவானா 39 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், அஷார் மஹ்மூட் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

175 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 18.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது விக்கெட்டை 24 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, அதன் பின்னர் இரண்டாவது விக்கெட்டுக்காக 118 ஓட்டங்களை வெறுமனே 12.5 ஓவர்களில் குவித்திருந்தது. அதன் காரணமாக வெற்றி இலகுவானது.


அதிரடியாக ஆடிய அடம் கில்கிறிஸ்ட் 54 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 85 ஓட்டங்களைக் குவித்தார்.

தவிர, அஷார் மஹ்மூட் 41 பந்துகளில் 61 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் சகீர் கான் 30 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், ஜெய்தேவ் உனத்கட் 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், முத்தையா முரளிதரன் 44 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக அடம் கில்கிறிஸ்ட் தெரிவானார்.

# டில்லியை வீழ்த்தியது சென்னை



டெல்லி அணிக்கு எதிரான போட்டியில் சென்னை அணி 33 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 64-வது லீக் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று இரவு 8 மணிக்கு நடைபெற்றது.

இதில் சென்னை சுப்பர் கிங்ஸ்- டெல்லி டேர் டெவில்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணித் தலைவர் தோனி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். கடந்த போட்டியில் விளையாடிய மோரிஸ நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக அல்பி மோர்கல் சேர்க்கப்பட்டார்.

ஹசி- விஜய் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். விஜய் 23 பந்தில் 31 ரன்கள் எடுத்து ரன் அவுட் ஆனார். ஹசி 26 ரன்னில் பவிலியன் திரும்பினார். அதன் பின் வந்த அதிரடி வீரர் ரெய்னா 7 ரன் எடுத்து ஏமாற்றம் அளித்தார்.

4-வது விக்கெட்டுக்கு தோனி- ஜடேஜா ஜோடி சேர்ந்தனர். இருவரும் நிதானமாக விளையாடி வந்தனர். ஜடேஜா 24 ரன்னில் யாதவ் பந்தில் கிளீன்போல்டானார். தோனி சிறப்பாக விளையாடி அரை சதத்தை கடந்தார். 5-வது விக்கெட்டுக்கு களம் இறங்கிய பிராவோ 12 ரன்னுடனும் தோனி 58 ரன்னுடனும் அவுட்டாகாமல் இருந்தனர். சென்னை அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட இழப்பிற்கு 168 ரன்கள் எடுத்தது.

டெல்லி அணி சார்பில் யாதவ் 2 விக்கெட்டும் மெர்வ் 1 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

பின்னர் 169 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி அணியின் சேவாக்- உன்முக்சந்த் களம் இறங்கினர். ஆட்டத்தின் 2-வது பந்தில் சேவாக் ரன் ஏதும் எடுக்காமல் டக் அவுட் ஆனார். அடுத்து சந்த் உடன் போதா ஜோடி சேர்ந்தார். சந்த் 16 ரன் எடுத்த நிலையில் பவிலியின் திரும்பினார். அதன்பின் வந்த வோர்னர் 44 ரன்களும் போத்தா 23 ரன்களும் எடுத்தனர்.

அதன்பின் வந்த டெல்லி வீரர்கள் சென்னை அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து அவுட் ஆனார்கள். இதனால் அந்த அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 135 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால் சென்னை அணி 33 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சென்னை அணி சார்பில் மோர்கல் 3 விக்கெட்டும் சர்மா,அஸ்வின், பிராவோ தலா இரண்டு விக்கெட்டுகளும் வீழ்த்தினார்கள்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சென்னை அணித் தலைவர் தோனி தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் சென்னை அணி 15 போட்டிகளில் 11-ல் வெற்றி பெற்று பிளே-ஆப் சுற்றுக்கு தகுதிப் பெற்றுள்ளது.

## பாக்.யுத்தக் கப் ...

இம்மாதம் 17 ஆம் திகதி வரையில் இலங்கையில் தங்கியிருக்கும்.

இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கு இடையில் இராஜதந்திர-கலாசார மற்றும் இராணுவ உறவுகளை மேம்படுத்தும் நோக்கிலேயே இக்கப்பல் இலங்கை வந்துள்ளதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சகல விதமான தாக்குதல்களையும் முறியடிக்கும் திறன் கொண்ட இக்கப்பல் 123 மீற்றர் நீளம் கொண்டது. 2010 ஆம் ஆண்டு சீனா சங்ஹாயில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

## பொதுநலவாய மாநாட்டுக்கு ...

உரிமை மீறல்கள் பற்றிய தேசிய விசாரணை நடைமுறை தொடர்பில் பயிற்சிகளை வழங்குவார்கள் என்றும் டாக்டர் மஹாநாம கூறினார்.

இலங்கையில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் இராணுவத்தினருக்கு மனித உரிமைகள் பற்றி தெளிவூட்டும் வேலைகளும் பல வாரங்களாக நடந்துள்ளதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் கூறினார்.

பொதுநலவாய மாநாடு நடக்கவுள்ள இலங்கையின் மீதே அனைத்து தரப்பினரின் கவனமும் குவிந்துள்ளதாகவும் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் குற்றஞ்சாட்டுவோர் இலங்கைக்கு வந்து நிலைமைகளை நேரில் பார்க்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

"பொதுநலவாய செயலாளரும் செயலக அதிகாரிகளும் ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் போலல்லாது, இலங்கையுடன் ஒத்துழைத்துச் செயற்படுகிறார்கள" என்றும் பிரதீபா மஹாநாம கூறினார்.

இதேவேளை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுயாதீனமாக இயங்கவில்லை என்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஏராளமான முறைப்பாடுகள் தேங்கிக்கிடப்பதாகவும் சர்வதேச மட்டத்தில் கடுமையான குற்றச்சாட்டுக்கள் இருந்து வருகின்றன.

ஆனால் அவ்வாறான குற்றச்சாட்டுக்களையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மறுக்கிறது.

இலங்கையில் இறுதிக்கட்ட போர்க் காலத்தில் நடந்த பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பேற்கச் செய்யும் சுயாதீனமான விசாரணைகளை இலங்கை நடத்தவேண்டும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கோரிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவது பொதுநலவாய விழுமியங்களுக்கு ஏற்பட்டுள்ள சோதனை என்றும் கனடா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## குடும்பப் பெண் ...

இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் திடீர் மரண விசாரணையதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்பின்பு சடலம் உறவினர்களிடம் நேற்று முற்பகல் ஒப்படைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## ரூ.100 கோடி ...

சட்டமன்றத்தில் கூறினார்.

மேலும் சிறந்த தமிழறிஞர்களுக்கு இப்போது வழங்கப்பட்டு வரும் பல்வேறு விருதுகள் தவிர, இனி திருக்குறள் முதலான அரும்பெரும் இலக்கியங்களை ஆங்கிலத்தில மொழிபெயர்த்த ஜி.யு.போப் மற்றும் இஸ்லாமியத் தமிழ்க் காப்பியமான சீறாப் புராணத்தை இயற்றிய உமறுப் புலவர் ஆகியோர் நினைவாகவும் விருதுகள் வழங்கப்படும் என்றும் முதல்வர் கூறினார். (செ)

## பொதுநலவாய ...

கருணாதிலக அமுனுகம, கனடாவின் தலைவர்கள் இதில் கலந்துக் கொள்ளா விட்டாலும் அதன் பிரதிநிதிகள் குழு ஒன்றேனும் இந்த மாநாட்டில் கலந்துக் கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளார்.

### பொதுநலவாய மாநாட்டுக்கு எதிர்ப்பில்லை!- ஐ.தே.க

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு ஐக்கிய தேசிய கட்சி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தாது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானம நிறைவேற்றப்பட்டுள்ளது. கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை காரணம் காட்டி அரசாங்கம் தேவையற்ற செலவினங்களை மேற்கொள்ள கூடாது என்றும் இதன்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (செ-11)

## வன்னியில் எவரும் ...

யுத்தத்திற்குப் பின் வன்னியில் எவரும் காணாமல்போகவோ அல்லது கடத்தப படவோ இல்லையென்றும் அவ்வாறு யாராவது கூறுவதாக இருந்தால் அதற்கான பொறுப்பைத் தான் ஏற்றுக்கொள்ளத் தயாரென்றும் வன்னி கட்டளைத் தளபதி தெரிவித்தார்.

காணாமல்போதல் மற்றும் கடத்தல் தொடர்பாக அரசுக்கு எதிராக போலி குற்றச்சாட்டுக்களை சுமத்துவோர் தமிழ் மக்களின் நலனுக்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் வன்னி கட்டளை தளபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

யுத்தத்தின்போது தமிழ் மக்கள் மட்டுமன்றி முஸ்லிம், சிங்கள மக்களும் காணாமல் போனதாக சுட்டிக்காட்டும் பொனிபஸ் பெரேரா, மீள் குடியேற்றத்தின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆலோசனைக்கமைய தமிழ் மக்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டதாகவும் அரசுக்கு எதிராக விரலை நீட்டுவோருக்கு இது மறந்து விட்டதா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இடம்பெயர்ந்த சிங்கள மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது கடைசியில் என்றும் சில தமிழ் அமைப்புகள் மற்றும் ஊடகங்கள் அதனை தெரிந்துகொண்டே உண்மையை பூதாகரமாக்கி கூறுவது கவலைக்குரியது என்றும் வன்னி கட்டளையிடும் அதிகாரி கூறினார்.

வன்னி மாவட்டத்தில் எவராவது காணாமல்போய் அல்லது இடம்பெயர்ந்து இருந்தால், அது தொடர்பாக தன்னை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து அறிவிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொனிபஸ் பெரேரா தெரிவித்தார். (செ-11)

## மாகாண அதிகாரங்களை ...

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அந்த இயக்கத்தின் தலைவர் வைத்தியர் குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த கடிதம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபையிலிருக்கின்ற காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கி விடுவதுடன். அரசியலமைப்பில் 154 ஏ(3), 154 ஏ(2), 154 ஜி(3) மற்றும் மாகாண சபை பட்டியலில் 4.2 உறுப்புரை ஆகியன திருத்தியமைக்கப்பட்டு மாகாண சபை அதிகாரம் குறைக்கப்படல் வேண்டும்.

இந்த அதிகாரங்களை குறைக்காமல் வடக்கு மாகாண சபைத்தேர்தலை நடத்த வேண்டாம் என்றும் எனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளேன்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்ற நிலையில் திஸ்ஸ விதாரண, டியூ. குணசேகர மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகிய அமைச்சர்கள் நாட்டுக்கு துரோக மிழைக்கும் நடவடிக்கையினை எடுத்து வருகின்றனர்.

அவர்கள், நாட்டை பிரிப்பதற்கான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளேன்.

தமது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் ஜனாதிபதி வடக்கு தேர்தலை நடத்துவதற்கு முயன்றால் அது ஈழம் உருவாகுவதற்கான பாதையை வெட்டுவதாகவே அமையும் என்றும் அவருக்கு எடுத்துரைத்துள்ளேன் என்றார். (செ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதிய அமெ.தூதரகம் ...

பிரித்தானியா பிரதி உயர் ஸ்தானிகர் ரொபி புளுச் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மெரைன் ட்ரைவ் வீதி விஸ் தரிப்பிற்கு தேவையான காணியினை அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-11)


## வேலைவாய்ப்பு

யாழில் பிரபலமாக இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல கம்பனிக்கு ( Innovage ) ஊழியர்கள் தேவை. துடிப்பு மிக்க இளைஞர்கள், யுவதிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் முகமாக இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- அனுபவம் பயிற்சியின் மூலம் வழங்கப்படும்.
- சம்பளமாக தொடக்கம் 15,500 (ஆரம்ப சம்பளம்) வழங்கப்படும்.
- பின்னர் நிரந்தர வேலைவாய்ப்புடன் 38,000/= பெறலாம் .
- தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.
- கல்வித் தகைமை : சாதாரண கல்வித் தகைமை O/L, A/L....
- வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைத்து தரப்படுகிறது.
- மேலும் பல சலுகைகள் வழங்கப்படுகின்றது.

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்:0770878555, 0772151014

(2641)

## மிக விரைவில்.....

மாணவச் செல்வங்களே! உங்களுக்காக,

**யாழ் மண்ணில் புதியதோர் உதயம்**

கொழும்பு, யாழ் நகர்களின் பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

உயர் தர (A/L)

கலை, வர்த்தக, கணித, உயிரியல் வகுப்புக்கள்

**இடம்**
**இணுவில் சந்தி - தாவடி சந்திக்கிடையில்**

அரியதோர் வாய்ப்பு!
காத்திருங்கள்.

- நிர்வாகி

(2637)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

af

பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்). France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.இன்றே பதிவு செய்யுங்கள்.

புதிய வகுப்பு :விரைவில் ...2 pm-4 pm (சனி, ஞாயிறு)

61, Kachchery-Nallur Road,Jaffna. *T.P.:0212228093*

கச்சேரி பஸ் தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்

(2576)

## உங்கள் அன்பு உறவுகளுக்கு ...!

**www.creativedesk.lk/shop**

மேலதிக விபரங்களுக்கு:-
077 777 8529

(2610)

## வீடு வாடகைக்கு உண்டு

நாவலர் வீதி, அன்னசத்திர லேனில் சகல வசதிகளுடன் கூடிய (7 அறைகள், குளிரூட்டப்பட்ட, பாதுகாப்பு கமராக்களுடன், வாகனத் தரிப்பிடம்) மாடி வீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 047 6299, 077 228 7211

(2642)

## காணி விற்பனைக்கு

காரைநகர் கசூரினா கடற்கரையில் (Casutena Beach) பனை, தென்னை, மா போன்ற பயன்தரு மரங்களுடன் கூடிய முக்கியமான 13 ஏக்கர் (210 பரப்பு) காணி விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:-
077 078 0393, 077 769 6443

(சி-3339)

## வடமராட்சியில்

**சிங்கள மொழி வகுப்புக்கள்**
**வெகுவிரைவில் ஆரம்பமாக இருக்கின்றது**

அடிப்படையில் இருந்து ஆறு மாத கால பாடநெறி.
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் கையொப்பத்துடன் சான்றிதழ்.
அரச, வங்கி, தனியார் உத்தியோகத்தர்களுக்கான விசேட வகுப்புக்கள்.

விரிவுரையாளர்: செல்வி. சுபசிங்கமுதியான்சேலாகே ரஸ்மி தாரக்கா

மேலதிக விபரங்களுக்கு: சதாபொன்ஸ் கல்வி நிலையம் அல்வாய்

தொ.பே : 0212263206, 0773095176

(சி-3338)


## மூன்றாம் ஆண்டு நினைவு நாள்



அமரர்
**கந்தையா நேசமணி**

15.05.2010 அன்று மோட்சப் பயணம் சென்ற எமது அன்னை கந்தையா நேசமணி அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பிலும்
வாழ்வான்"
– யேசு

பிறப்பு 18.07.1936
இறப்பு 15.05.2010

கந்தையா குடும்பத்தினர், பிள்ளைகள்.

கொழிகாமம் வீதி, துன்னாலை கிழக்கு, கரவெட்டி.

(2607)


**2009 தொடக்கம்** சிகரம் தொடு சஞ்சிகை => ஊடகப் பயிற்சி => கல்வி-தொழில் வழிகாட்டி சேவை=> வெளிநாட்டுக் கல்வி=>தொழில்வாய்ப்புக்கள் => www.sikaram.lk இணைய ஊடகம் என...

# 3 ஆண்டுகளைக் கடந்து சிகரம் வெற்றிப் பயணம்

இப்போது புதிய இடத்தில், மேலும் பல புதிய சேவைகளுடன்...

UK, Australia, New Zealand, Canada, USA, Malaysia, Thailand பல்கலைக்கழக அனுமதிகள் & தொழில்வாய்ப்புக்கள்

O/L சித்தியடையாதவர்களுக்கும், மாதம் 50,000/- வருமானம், University of East London, AETS Australia சான்றிதழ்களுடன் ஹொட்டேல் பயிற்சிநெறி




150க்கு மேற்பட்ட உள்நாட்டு-வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள், 500க்கு மேற்பட்ட கற்கைநெறிகள் தொடர்பான விபரங்களுடன் சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி விபரக்கொத்து 2012-2013



விலை 300/-

இலகுவழி ஆங்கிலக் கற்கைநெறி (பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள், பல்கலை மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர், வெளிநாடு செல்ல விரும்புவோர், IELTS தோற்றவிருப்போருக்கு)

**விசேட கருத்தரங்கும், வகுப்பு ஆரம்பமும்**
25-05-2013 ஞாயிறு, காலை 10 மணி



சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி (மாத இதழ்) உள்நாட்டு-வெளிநாட்டு, கல்வி-தொழில் வழிகாட்டி விபரங்களை தினமும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
facebook.com/edusikaram

க.பொ.த. உயர்தரமோ, சாதாரணதரமோ, 10ம் வகுப்போ- எவருக்கும் அவரவர் தராதரத்துக்கேற்ற உள்நாட்டு, வெளிநாட்டு கல்வி-தொழில் வாய்ப்புக்கள்

எந்தவொரு நாட்டுக்குமான மாணவர் விசா, தொழில் விசா, குடியுரிமை விசா, நிராகரிக்கப்பட்ட விசா மீள்விண்ணப்பம் etc.

சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11 நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.